Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 07 சனிக்கிழமை (23.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 326

## சங்குப்பிட்டியில் மின்னல் இருவர் கருகி காயம்

(யாழ்ப்பாணம்)

கடும் மழை பெய்துகொண்டிருந்த வேளையில் சங்குப்பிட்டிப் பாலம் ஊடாக பயணித்த இருவர் மின்னல் தாக்கியதில் எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்று இரவு 8 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கரியாலை, நாகபடுவானைச் சேர்ந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கனமழை; வறட்சிக்கு முற்றுப்புள்ளி

(கொழும்பு)

வடமாகாணத்தில் நிலவிய தொடர்ச்சியான 7 மாத கால வறட்சிக்குப் பின்னர் நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்துள்ளதுடன், தொடர்ந்தும் மழை பெய்வதற்கான காலநிலை நிலவி வருகின்றமையினையடுத்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 86 ஆயிரத்து 685 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கடுமையான குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கான தண்ணீர் இல்லாமல் தவிப்பதாகவும், இதனால் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகியன பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகியன வடக்கின் மிக பிரதான வாழ்வாதார தொழில்கள் என்ற அடிப்படையில் மிகப்பெரும் வாழ்வாதார நெருக்கடியும் உருவாகும் என தேசிய அனர்த்த முகாமைத்துவ பிரிவு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 19 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் இடி செயலக விடுதி சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று மாலை கடும் இடி மின்னலுடன் கன மழை பொழிந்தது.

இதன்போது இடித்தாக்கம் காரணமாக கனகபுரத்தில் அமைந்துள்ள கரைச்சி பிரதேச செயலகத்தின் விடுதி சேதமடைந்துள்ளது. ஊழியர்கள் எவருக்கும் பாதிப்பு எதுவும் இல்லை. (18)

# படை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதில் தவறு இல்லை

## புதுடில்லியில் சம்பந்தன்

(புதுடில்லி)

இலங்கை படைகளின் அதிகார்ரிகளுக்கு இந்தியா விசேட பயிற்சிகளை வழங்குவதில் தவறில்லை. இந்த விவகாரத்தில் கருத்துச் சொல்வதற்கு எம்மிடம் எதுவும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்றிருக்கும் கூட்டமைப்பின் தூதுக்குழுவினர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் குழுவினர் நேற்றுக் காலை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் அந்த அமைச்சகத்தின் மூத்த அதிகார்ரிகளை சந்தித்தார்கள்.

இந்தச் சந்திப்பின் போது, தமிழர்களின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றதாகவும், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை முறையாக பெற்றுத் தருவதற்கு உதவிபுரிய கோரப்பட்டதாகவும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பி.பி.சி. தமிழோசையிடம் மேலும் தெரிவித்தார்.



இலங்கையில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கவும் மொழி மற்றும் கலாசார ரீதியான அடையாளங்களை மாற்றியமைக்கவும் மத்திய அரசாங்கத்தால் தீவிரமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்களை தடுத்து நிறுத்தவும், நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் நிலையை உருவாக்க முன்னுரிமை அளிக்க வலியுறுத்தியும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் சம்பந்தன் கூறினார்.

அத்தோடு வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு முதல்வராக விக்னேஸ்வரன் பொறுப்பு வகித்து வரும் சூழலில் கூட முதல்வர் பொறுப்பிற்கான கடமைகளை நிறைவேற்றக்கூடிய

19 ஆம் பக்கம் பார்க்க

# "வாழ்வின் எழுச்சி" திட்டம் அடுத்த கட்டம் ஆரம்பம்

## யாழ். செயலகத்தில் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஆறாவது கட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கிணங்க இத்திட்டம் விரைவாக அமுலாக்கப்படவுள்ளது.

இதன் முன்னோடியாக வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் 6 ஆவது கட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் வாழ்வின் எழுச்சி

19 ஆம் பக்கம் பார்க்க

# அரச சொத்துக்கள் சொந்தப் பாவனைக்கா?

## விக்கிக்கு சங்கடம் கொடுத்த கேள்வி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், அவைத் தலைவர் மற்றும் அமைச்சர்களின் பாவனைக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் பிரத்தியேக பாவனைக்கா அல்லது உத்தியோகபூர்வ பாவனைக்கா என்பதில் விளக்கம் குறைவாக இருப்பதால் அவையில் விளக்க வேண்டும் என ஆளும்கட்சி உறுப்பினர் சயந்தன் முதலமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாணசபை அமர்வின்போது வாய்மூல கேள்வி நேரத்தில் வாகனக் கொள்வனவு தொடர்பில் முதலமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பிய வேளையில் முதலமைச்சர் அதற்கு பதிலளித்துக் கொண்டிருந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி; மேலும் இருவர் ஆபத்தான நிலையில்!


## இளவாலையில் நேற்றிரவு விபரீதம்

(யாழ்ப்பாணம்)

மழை பெய்துகொண்டு இருந்த வேளையில் மின்சாரம் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மூவரை மின்சாரம் தாக்கியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார் மற்றும் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இளவாலை சித்திரமேழி சந்தியில்

19 ஆம் பக்கம் பார்க்க



# ஒழுக்கவிதிக் கோவை நடைமுறைகள் மாகாணசபையில் அவமதிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

நீங்களே தயாரித்த வடமாகாண சபையின் ஒழுக்கவிதி நடைமுறைக் கோவையை மதிக்காத வகையில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் செயற்படுவதாக வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின் போது சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவை நடைமுறைக் கோவை ஒன்றை நீங்களே தயாரித்துள்ளீர்கள். அதில் ஒரு உறுப்பினர் அவைத் தலைவரை நோக்கி உரையாற்றும் போது, அவ்வுறுப்பினருக்கும் செங்கோலுக்கும் இடையில் குறுக்காகச் செலலக்கூடாது எனத் தெட்டத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைப் படித்துப் பார்த்தார்களோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவையில் நடைமுறைச் சட்டக் கோவையை அவமதிக்கும் வகையில் ஒரு உறுப்பினர் குறுக்காகச் செல்கிறார். இது ஒழுங்கு விதிகளுக்கு முரணானது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (இ)

# ஆண்டு நிறைவு விழாவில் இறைபணிக்கு பாராட்டு



தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சக ஆதீனத்தின் பேராயர் அதி. வணக்கத்துக்குரிய அருட்கலாநிதி டானியேல் செல்வரத்தினம் தியாகராஜா, ஆயர் பட்டம் பெற்று எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும், கிளிநொச்சி சாலோம் நகர் தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆலய கட்டடத் திறப்பு விழாவும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இன்நிகழ்வில் தெற்கிலிருந்தும் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆலயத்தின் நிரந்தரக் கட்டடம் தென்னிந்திய திருச்சபையினால் கட்டப்பட்டு நேற்று பேராயரினால் பிரதிஷ்டை செய்யப்பட்டு. ஆராதனையில் பேராஜரினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்தும் ஊழியர்கள், மக்கள் என பல்வேறுபட்டோர் கலந்து கொணடனர்.

குறித்த நிகழ்விற்காக இந்தியாவிலிருந்து ஆயர் குழுவும் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. ஆராதனையின் பின்னர் பேராயர் டானியேல் தியாகராஜா, பேராயரின் பாரியார் தயாளினி தியாகராஜா ஆகியோரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுப் பரிசுகளும் வழங்கப்படடன. 2006.08.21 ஆம் திகதி யாழ் அத்தியட்சக ஆதீனத்திற்கான பேராயராக இவர் அபிசேஷம் பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (29)

# தருணம் பார்த்து கொள்ளை; யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் அமைந்துள்ள பான்சிக்கடை ஒன்றில் மின் தடைப்பட்ட வேளை பொருட்கொள்வனவில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டிலிருந்து வந்த பெண் ஒருவரின் வெளிநாட்டு நாணயம் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கியிருந்த கைப்பை ஒன்றினை திருடன் அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இது குறித்த முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து அந்த பான்சிக் கடையில் பொருத்தப்பட்டிருந்த கமராவின் பதிவைப் பார்த்த போதும் திருடன் குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கனடாவில் இருந்து அவரது உறவினர் வீட்டிற்கு வந்திருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கைப்பையில் வெளிநாட்டு நாணயம் உட்பட சுமார் 60 ஆயிரம் ரூபா பணம், அடையாள அட்டை உட்பட ஆவணங்களையும் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)


# கல்வியங்காட்டில் இருவர் மீது விசாரணை

கல்வியங்காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருத்தக உரிமையாளர் ஒருவரும், உணவக பணியாளர் ஒருவரும் பொலிஸாரினால் கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் திருத்தக உரிமையாளரும், நேற்று உணவகப் பணியாளரும் இவ்வாறு பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் சம்பந்தமான பிரச்சினை தொடர்பாகவே விசாரணைக்காக இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (137)

# கொக்காவில் சந்தியில் காத்திருக்கும் ஆபத்து

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கொக்காவில் சந்திப் பகுதியில் மின்சார இணைப்பு வயர் அறுந்துள்ளதால் அதனூடான போக்குவரத்து அபாயகரமானதாக அமைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அறுந்து தொங்கும் மின் வயரால் மின்சாரம் பாய்வதாகவும் இதனால் இதனூடாகச் செல்லும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும், எதிர்பாராமல் முட்டுப்பட்டு விட்டால் மின் தாக்கத்திற்கு ஆளாக நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே அறுந்த இணைப்பு வயரை அகற்றிச் சீர் செய்ய உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (81)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1085

திகதி 21.08.2014

வெற்றி எண்கள் 07 27 35 50

ஆங்கில எழுத்து X

ஜக்பொட் பரிசு ரூ. 3,68,40,700/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,68,40,700/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 255 | 1,000/= | ரூ. 2,55,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 453 | 1,000/= | ரூ. 4,53,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11435 | 60/= | ரூ. 6,86,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6004 | 40/= | ரூ. 2,40,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150280 | 20/= | ரூ. 30,05,600/= |
| ஆங்கில எழுத்து | 21831 | 20/= | ரூ. 4,36,620/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 66,76,480/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா 37,134,620/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.08.25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3763)




ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், கூட்டுறவு தினத்திற்கான வேலைத்திட்டமாக சிரமதானப் பணி, புதிய அங்கத்தவர்கள் தெரிவு என்பன மேற்கொள்ளப்பட்டது.

ஊர்காவற்றுறை பலநோக்குச் கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான பாவனையில் இல்லாத நாரந்தனை மொத்த நிலையமும், அதன் சுற்றுப்புறச் சூழலும் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் தலைவர், நெறியாளர் சபை உறுப்பினர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள் உட்பட யாவரும் கலந்து சிறப்பித்துள்ளனர். (65)

# விழிப்புணர்வுச் செயலமர்வு


கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிருஷணபுரம் கிராம சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு முழுநாள் விழிப்புணர்வுச் செயலமர்வொன்று நேற்று நடைபெற்றது.

வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் இராஜரட்ணம் செந்தூரன், மாவட்ட உள வளதுணை அலுவலர் தேவராஜா துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'வேள்ட் விசன்' நிறுவன நிதி அனுசரணையில் அதன் திட்ட இணைப்பாளர் எஸ்.ஜேசுதாஸ் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது. கிருஷ்ணபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த சிறுவர் கழகத்தின் 60 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் சிறுவர் கழகத்தின் செயற்பாடுகள் எவ்விதம் அமைதல் வேண்டும், அதனை எவ்விதமாக கையாளுதல் வேண்டும், சிறுவர் துஷ்பிரயோகங்களை எவ்விதமாக அடையாளம் காணுதல், அவற்றை யாருக்கு அறிக்கையிட்டு தீர்வுகளைப் பெறறுக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் வளவாளர்களால் எடுத்துக் கூறப்பட்டன. (90)

# ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படவில்லை

## சுட்டிக்காட்டுகிறார் வடமாகாணசபை அவைத்தலைவர்



(யாழ்ப்பாணம்)

2006 ஆம் ஆண்டுக்கு முன்பு ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களது ஓய்வூதியம் தொடர்ந்தும் மாற்றமடையாது. மீளாய்வு செய்யப்படாமலே வழங்கப்பட்டு வருவது தொடர்பில் வடமாகாண சபையில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமாவில் அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானத்தினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அமுலாக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான புதிய சம்பள அளவுத்திட்டத்தின் படியே அத்திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் கணக்கிடப்படுகின்றது.


எனினும், 2006.01.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களது ஓய்வூதியம் தொடர்ந்தும் மாற்றமடையாது மீளாய்வு செய்யப்படாது வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் இத்தரப்பினர் பாரிய பாகுபாட்டிற்கு ஆளாகியுள்ளனர். அத்துடன் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவிலும் சமநிலை பேணப்படவில்லை.

ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகள் இவை நீக்கப்படுமென தெரிவித்து வந்தபோதும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாத அதே வேளை வருடாந்த வரவு செலவுத் திட்டங்கள் மூலம் சிறிய சலுகைகள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே, 2006.01.01 திகதிக்கு முன்பு ஓய்வு பெற்ற ஊழியர்களது ஓய்வூதியத்தை அத்திகதியிலிருந்து அமுலாக்கப்பட்ட 6/2006 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படியான சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைவாக மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் நிதி நெருக்கடி காரணமெனின் நிலுவையின்றி இந்த மீளாய்வை 2015.01.01 ஆம் திகதியிலிருந்து அமுல் செய்ய வேண்டுமெனவும் நிதி அமைச்சரான ஜனாதிபதியைக் கோரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ)

# துர்நாற்றம் வீசும் நிலையில் யாழ்.நகரப்பகுதி வாய்க்கால்கள்



யாழ். நகரப்பகுதிகளில் துர்நாற்றம் வீசும் நிலைமை காணப்பட்டு வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யாழ். ஆஸ்பத்திரி வீதி, காந்தி ஜீ வீதி உள்ளிட்ட நகரின் முக்கிய வீதிகளில் உள்ள வாய்க்கால்கள் துப்பரவு செய்யாமல் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையை சுற்றியுள்ள கால்வாய் புற்கள் நிறைந்து காணப்படுவதுடன், அக்கால்வாய் வழியாக வரும் கழிவு நீர் ஓடிப்பாய முடியாமல் தேங்கி நிற்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இப்பகுதியில் செல்லும் கால்வாய், துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் பயணிகள் செல்வது சிரமமாக இருப்பதுடன், துர்நாற்றத்தினால், சுவாச நோய்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன.

எனவே நகரப்பகுதியில் உள்ள வாய்க்கால்களின் துப்புரவுப் பணியினை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

# குழாய் பொருத்தப்பட்டும் நீர் வழங்கல் இல்லை

## -விசனமடையும் வேம்பிராய் பகுதி மக்கள்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி பகுதிக்கு வேம்பிராயில் இருந்து நீர்க்குழாய் பொருத்தப்பட்டு வரணி மத்திய கல்லூரிவரை நிறைவடைந்திருக்கின்றது நீர் குழாய் பொருத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றபோதிலும் இதுவரை குழாய் பொருத்திய அதிகாரிகள் நீர் கிடைக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பெரும்தொகை பணம் செலவழித்து குழாய் பொருத்தப்பட்ட போதிலும் பயன் ஏதும் கிடைக்கவில்லையென பொது அமைப்புக்கள் விசனம் தெரிவிக்கின்றன.

வரணி பகுதியில் உள்ள குடிநீர் கிணறுகள் வறட்சி காரணமாக வற்றியுள்ளதாகவும் குடிநீர் பெறுவதற்காக பொதுமக்கள் பல மைல் தூரம் சென்றே நீரை எடுப்பதாகவும், இதனை அதிகாரிகள் கவனத்தில் எடுக்காது அசமந்தப்போக்கு காட்டுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (14)

# கோழி மேய்ச்சாலும்... போய் அரச சார்பற்ற நிறுவனங்களில மேய்க்க வேணும்...






தொண்டு நிறுவனங்கள் திண்டாடுகிறதைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேணும்.

தொண்டு நிறுவனங்கள் என்றாலே சனங்களுக்கு சேவை செய்யிற அமைப்புகள் என்றுதான் பொதுவான அபிப்பிராயம் இருக்கு.

ஆனால் தொண்டு நிறுவனங்களை வைச்சே பிழைப்பு நடத்துற காரியங்கள்தான் இப்ப கூடுதலா நடக்குது.

சில தொண்டு நிறுவனங்கள் ஆடு, மாடு, கோழி, தென்னை, மா, பலா, தோடை, எலுமிச்சை எண்டு சனங்களின்ர வாழ்வாதாரத்தை உயர்த்தப்போறம் – நிமித்தப்போறம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு இந்தப் பொருட்களை குடுக்கினமெல்லோ. இதில தான் விளையாட்டே இருக்கு.

இந்த ஐற்றங்களை வாங்குறதுக்கு இவை போடுகிற பட்ஜெட்டைப் பாத்தீங்கள் என்றால் தலையைச் சுற்றும்.

ஒரு ஆட்டின்ர விலை இருபத்தையாயிரம், முப்பதாயிரம் எண்டு ஒரு கணக்கு.

ஒரு மாட்டின்ர விலை எண்பதாயிரம், தொண்ணூறாயிரம் எண்டு ஒரு மதிப்பீடு.

ஒரு கோழியின்ர விலை.... குதிரையின்ர விலையை விடக் கூடுதல்.

இப்பிடியே தென்னைக்கு, மாவுக்கு, பலாவுக்கு, தோடைக்கு எண்டு இவை போடுகிற விலையை விட காணியின்ர விலை வலுக்குறைவு.

இப்பிடியெல்லாம் கணக்குக் காட்டி வாற காசை கொமிசன் எண்டும், கொள்ளை லாபம் எண்டும் தாங்கள் அடிச்சுக்கொண்டு பாவப்பட்ட ஏழைச்சனங்களுக்கு நோஞ்சான் கோழியும், வலிச்சல் மாடும் குடுக்கிற காரியங்கள் தான் தொடருது.

இதையெல்லாம் கண்காணிக்கிறதுக்கெண்டு அரச உத்தியோகத்தர்களும் இருக்கிறார்கள்.

பாவம், அவர்கள் தான் என்ன செய்யிறது?

ஒடுகிற தண்ணியில அள்ளுகிறது குற்றம் இல்லை எண்ட மாதிரி தங்களுக்கும் ஒரு கொமிசனை எடுக்க விரும்புகினம். கள்ளனும், காவற்காரனும் சேர்ந்தால் பிறகு திருட்டைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

அடிக்கிறது எல்லாம் அடிச்சு முடிய மிஞ்சுகிறது மிச்சம் எண்ட மாதிரி இதாவது கிடைக்கிறது புண்ணியம் எண்டு இவை குடுக்கிறதை சனங்கள் வாங்கிக்கொண்டு போகுதுகள்.

இந்த விளையாட்டில சில அமர்க்களங்களும் நடக்கிறது உண்டு.

போன கிழமை இப்பிடித்தான் தொண்டு நிறுவனம் ஒண்டு ஆவலாதிப்பட்டு நாற்பது ஆடுகளை குறைஞ்ச விலையில வாங்கிக்கொண்டு வந்து கட்டி விட்டினம். ஆனால் என்ன கஸ்ரகாலமோ தெரியாது இதைக் குடுக்கிறதுக்கு அனுமதி கிடைக்கேல்ல. அனுமதி கிடைக்கும்வரை ஆட்டுக்கு குழை போடுகிற வேலை வந்திருக்கு இந்தத் தொண்டு நிறுவனச் சிங்கங்களுக்கு.

இதால அந்தத் தொண்டு நிறுவனத்தின்ர வாகனங்கள் இப்ப குழையை ஏத்திக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஆட்டுப்பட்டிக்கு போய்க்கொண்டு இருக்கின்றன. ஆட்டை வைச்சு பிழைச்ச ஆக்களுக்கு ஆடு குடுக்கிற விசயம் பிழைச்சதால ஆடுகளுக்கு குழையைப் போட்டு மேய்க்க வேண்டி வந்திருக்கு.

இதை மாதிரி கொஞ்ச நாளைக்கு முதல் கோழி குடுக்க வெளிக்கிட்ட ஆக்களுக்கும் இப்படியொரு சோதினை வந்தது. கோழிக்கு தீனி போட்டு களைச்சவை.

இடைக்கிடை இப்பிடிச் சோதினையள் வாறது நல்லதுதான்.

எண்டாலும் களவெடுத்த கையும், ஊரைத்திண்ட நாக்கும் லேசில சும்மா இராது.

தொண்டு நிறுவனங்கள் எண்ட பேரில ஊரையும், உலகத்தையும் திண்டு முடிக்கிற சங்கதிகள் தான் நடந்துகொண்டிருக்கு.

மக்களைக் காப்பாத்திறதுதான் தொண்டு நிறுவனங்களின்ர வேலை எண்டு சொல்லிக்கொண்டிருந்தது போய்... இப்ப, இந்தத் தொண்டு நிறுவனங்களிட்டயிருந்து மக்களைக் காப்பாத்திறதுதான் பெரிய வேலை எண்டாகிப் போச்சு...

இதெல்லாம் பெரிய அரசியல்.

ஆக ஒரே ஒரு வித்தியாசம், இது வெள்ளைத்துணி அரசியல் அவ்வளவுதான்.

மனிதகுல முன்னேற்றத்திற்காக மனிதன் உழைக்கிற இடமே உயர்ந்த கோயில். - ஸ்டிலி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கூட்டமைப்பின் நாடகங்கள்!

வடமாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியை உபயோகப்படுத்தாமல் திரும்பவும் திறைசேரிக்கு அந்த நிதி திரும்பும் நிலையை இங்கே உருவாக்கி விட்டு, 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி இந்தியப் பிரதமரை வேண்டிக்கொள்ள புதுடெல்லி சென்றிருக்கிறதாம் கூட்டமைப்பு!

13வது திருத்தத்தை தீர்வின் ஆரம்பமாகக் கூட ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம் என்று சொல்லிக்கொண்டே, இந்தியா என்ன அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்று இவர்கள் அங்குபோய்க் கேட்கப் போகிறார்கள்? வேறென்றுமில்லை, தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்று தமிழ் மக்களை ஏமாற்றும் கூட்டமைப்பின் போலி நாடகங்களில் ஒன்றுதான் இதுவும்.

புதுடெல்லியிலிருந்து திரும்பி இங்கு வந்திறங்கியதும் என்ன சொல்வார்கள் என்பது நம் எல்லாருக்கும் நன்கு தெரிந்ததுதான். ஏனென்றால், கடந்த ஐந்து வருடங்களாக வெளிநாட்டுப் பயணங்களை முடித்துக்கொண்டு வந்து அவர்கள் அவிழ்த்து விடும் "சுத்து" மக்கள் எல்லோருக்கும் மனப்பாடமே ஆகியிருக்கிறது.

"மோடியிடம் நமது பிரச்சினைகளை விரிவாக எடுத்துச் சொன்னோம்... ***(இலங்கையில் என்ன பிரச்சினை என்று இதுவரை அறியாத அயல்நாட்டுப் பிரதமராம் அவர்!)*** எல்லாவற்றையும் வெகு உன்னிப்பாக கேட்டறிந்து கொண்டார்... ***(இலங்கையில் ஏதோ பிரச்சினை இருப்பதாக இப்போதுதான் அவருக்குத் தெளிவாகப் புரிய ஆரம்பிக்கிறது)***

விரைவில் இலங்கை அரசு இதன் பிரதிபலிப்பை உணர வேண்டி வரும்... ***(அதாவது, 'மிஸ்டர் மகிந்த அவர்கள் கேட்பதை மரியாதையாகக் கொடுத்து விடும்' என்று மோடி மிரட்டப் போகிறார் என நாங்கள் விளங்கிக் கொள்ள வேணுமாம்!!)***

இலங்கை அரசு இனியும் தமிழர்களின் உரிமைகளைப் புறக்கணித்து நடந்துகொள்ள முடியாது... ***(இவர்கள் போய்க் கதைத்த பிறகு மோடிக்கு எமது பிரச்சினை ஐயந்திரிபற விளங்கிவிட்டதால், மகிந்தவை மடக்க இவர்கள் வகுத்துக் கொடுத்துவிட்டு வந்திருக்கும் திட்டத்தை மோடி செயற்படுத்தப்போவதைக் காண நாம் தயாராயிருக்க வேண்டியதுதான்!!!)***"

இதுதான் கூட்டமைப்பினர் இந்தியாவிலிருந்து வந்து காட்டப் போகும் பிலிம்! ஆனால் உண்மையில் என்ன நடந்திருக்கும் என்பதையும் நாம் ஊகிப்பது ஒன்றும் சிரமமல்ல.

மேற்குநாடுகளின் தாளத்திற்கு நீங்கள் (கூட்டமைப்பு) ஆடிக்கொண்டிருப்பதைத் தாங்கள் (இந்தியா) ரசிக்கவில்லை என்பதைப் பக்குவமாக எடுத்துச் சொல்லிவிட்டு, 13வது திருத்தம்தான் சிறந்த அடித்தளம். அதிலிருந்து உங்கள் அரசுடன் பேச்சை ஆரம்பியுங்கள் என்பதை இதமாக எடுத்துச் சொல்லியிருப்பார்கள்.

இவர்கள் உலக்கையை விழுங்கியதுபோல் கமுக்கமாகத் திரும்பிவந்து, மேற்சொன்ன வீரவசனங்களுடன் போலி நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுவார்கள். அட இவர்கள் மோடியுடன் கதைத்துவிட்டு வந்து இவ்வளவு நாட்களாகியும் எதுவும் நடைபெறக் காணோமே... என்று மக்கள் கேட்க உன்னுவதற்குள், ஜெனீவாத் திருவிழாவுக்கான அறைகூவல்களை ஆரம்பிப்பதற்கு வேளை வந்துவிடும்.

பிறகென்ன? இம்முறை (2015-ல்) போர்க்குற்ற விசாரணை சர்வநிச்சயம். நாம்தான் அதற்கான பிரேரணை வாசகங்களை அமெரிக்காவுக்குத் தயாரித்துக் கொடுத்திருக்கிறோம் என்று கோட் சூட் போட்டுநின்று முழங்கினால், தமிழ்மக்கள் புல்லரித்துப் போக மாட்டார்களா?

பிறகு, வரப்போகும் தேர்தலுக்கு முன்னர், ஏதாவதொரு வெளிநாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஒரு அதிகாரியையோ அல்லது கிளார்க்கையோ கொண்டு, "இந்தத் தேர்தல் முடிவுகளை நாங்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்ல வைத்துவிட்டால் சரி... மக்கள் கியூவில் நின்று அள்ளிப் போட்டுவிட மாட்டார்களா? - ஆசிரியர்.

# மத்தல விமான நிலையத்தின் வருடாந்த வருமானம் 4 கோடி

(கொழும்பு)

மத்தல மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் வருடாந்த வருமானம் 4 கோடியே 32 இலட்சத்து 89 ஆயிரத்து 400 ரூபா எனவும், அங்கு பணியாற்றும் ஊழியர்களின் மாத சம்பளத்திற்கான செலவு 3 கோடியே 22 இலட்சத்து 575 ரூபா எனவும் தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன வழங்கிய பதிலில் இந்த வருமானம் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலாக விமான நிலையத்தில் மாத சம்பள செலவு தொடர்பான தகவல் தெரியவந்தது.

மத்தல விமான நிலையத்திற்கு 5 விமான நிறுவனங்களின் விமானங்கள் வந்து சென்றுள்ளன.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், மிஹின் லங்கா, பிளைய் டுபாய், ரொட்டானா ஜெட் உட்பட 5 விமான நிறுவனங்களின் விமானங்கள் மத்தல விமான நிலையத்திற்கு வந்து சென்றுள்ளன.

இதில் அதிகளவான வருமானம் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்தின் ஊடாக ஈட்டப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்திடம் இருந்து 3 கோடியே 11 இலட்சத்து ஆயிரத்து 841 ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. அடுத்ததாக பிளைய் துபாய் நிறுவனத்தின் ஊடாக 99 இலட்சத்து 74 ஆயிரத்து 203 ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அண்ணளவாக விமான நிலையத்தின் ஊழியர்களுக்கான சம்பளமாக வருடாந்தம் 38 கோடியே 64 இலட்சத்து 6 ஆயிரத்து 900 ரூபா செலுத்தப்படுகிறது.

எனினும் வருடாந்த வருமானம் 4 கோடியே 32 இலட்சத்து 98 ஆயிரத்து 400 ரூபா.

இதன் மூலம் அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக அதிக வட்டியில் பெறப்பட்ட கடனை நாட்டு மக்கள் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட் டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு 1649 என்ற எண்ணிக்கையில் இருந்து எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கை 2013ஆம் ஆண்டில் 1845 ஆக உயர்ந்திருந்தது. நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த புள்ளிவிபரம் வெளியிடப் பட்டது.

இலங்கையில் முதலாவது எச்.ஐ.வி. தொற்றாளர் 1987ஆம் ஆண்டு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் இனங்காணப்பட்டார்.

இந்தநிலையில் 2000 ஆம் ஆண்டு 358 பேரும், 2007 ஆம் ஆண்டு 957 பேரும், 2011 ஆம் ஆண்டு 1463 பேரும் இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டனர். பாதுகாப்பற்ற பாலியல் உறவு முறைகளும் தாய்மாரில் இருந்து குழந்தைக்கான பரிமாற்றங்களுமே இதற்கான காரணங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமைப்பாளர்கள் நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிதாக ஐந்து தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

புதிய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதற்கிடையில் இந்த நிகழ்வின் போது, ஐக்கிய தேசிய கட்சிக்கும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்தானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் மூல வாக்குச்சீட்டுகள் 25 ஆம் திகதி ஒப்படைப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்திடம் எதிர்வரும் 25 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது.

தபால் மூல வாக்களிப்பிற்காக 30,699 அரச உத்தியோகத்தர்கள் தகுதி பெற்றுள்ளனர். பதுளை மாவட்டத்தில் 20,027 பேரும் மொனராகல மாவட்டத்தில் 10,672 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நான்காம், ஐந்தாம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்புகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாக்களிப்பு நிலையத்திற்கருகில் தேர்தல் பிரசாரம் செய்யத் தடை

(கொழும்பு)

அஞ்சல் வாக்களிப்பு இடம்பெறும் மத்திய நிலையங்களில் இருந்து 500 மீற்றருக்குள்ளான பிரதேசங்களில் பிரசார நடவடிக்கையை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது இந்தத் தடையை மீறி செயற்படுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான சட்டவிரோத பிரசாரங்கள் இடம்பெறும் பட்சத்தில் பொலிஸ் திணைக்களத்திற்கு தகவல் வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்புகள் அடுத்த மாதம் 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்கம் கடத்தியவர்களின் வழக்கு ஒத்திவைப்பு

(மன்னார்)

தலைமன்னாரில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்த முற்பட்டமைக்காக கைதுசெய்யப்பட்ட மூன்று பேர் தொடர்பான வழக்கை மன்னார் மாவட்ட நீதிமன்றம் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

குறித்த மூன்று பேரும் 6 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளையில், அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இலங்கையில் தங்கத்தை வைத்திருப்பதை வரையறுக்கும் சட்டங்கள் எவையும் இல்லை என்று தெரிவித்து வாதிட்டனர்.

இதனை அடுத்து குறித்த வழக்கினை விசாரணை செய்யும் நீதி நியாயாதிக்கம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கு இருக்கிறதா? என்பது தொடர்பில் சட்ட அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை பெறப்படும் என்று நீதவான் ஆனந்தி கனகரட்ணம் தெரிவித்தார்.

# 2034ஆம் ஆண்டில் மூன்றாம் உலகப் போர் நடப்பதைப் பற்றிய ஒரு கற்பனை

**Artyom Lukin, Professor Far Eastern Federal University, Vladivostok, Russia**

மூன்றாம் உலகப் போர் நடப்பதாக இருந்தால், அது பெரும்பாலும் ஆசியாவில்தான் நடக்கும் மற்றும் அந்த மோதல், நடப்பிலுள்ள மேலாதிக்க அமெரிக்காவுக்கும் மற்றும் அதன் முதன்மைச் சவாலான சீனாவுக்கும் இடையேதான் ஏற்படும்.

இதில் நல்ல செய்தி என்னவென்றால் சீனா இப்போது, மற்றும் எதிர்பார்க்கக்கூடிய உடனடி எதிர்காலத்திலும் ஒரு போரை விரும்பவில்லை, ஏனெனில் பிரதானமாகவும் பீஜிங்கிற்கு முரண்பாடுகள் தனது பக்கத்தில் இல்லை என்று மிக நன்றாகத் தெரியும்.

ஆனால் 20 வருடங்களின் பின் 2034ஆம் ஆண்டில் பார்ப்போமானால் சூழ்நிலைகள் நிச்சயம் கணிசமான அளவு மாறியிருக்கும்.

யுத்தம் உடனடியாக எந்த நேரத்திலும் நடைபெறும் சாத்தியமில்லை என்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

முதலாவது, சீனாவின் பாதுகாப்பு வரவு செலவு திட்டத்தின் வருடாந்த வளர்ச்சி இரட்டை இலக்கத்தில் இருந்தாலும் கூட, சீனாவின் இராணுவ பலம் அமெரிக்காவை விட கணிசமான அளவு பின்னால் உள்ளது. கிழக்கு ஆசிய கரையோர அமெரிக்க - ஜப்பான் கூட்டுப் படைகளின் சம பலத்துக்கு வருவதற்கு அல்லது கிட்டத்தட்ட சம பலத்தை அடைவதற்கு சீனாவுக்கு இன்னமும் 15 முதல் 20 வருடங்கள் எடுக்கும்.


இரண்டாவது, பரஸ்பர சார்பு நிலையுள்ள எல்லாப் பேச்சுக்களிலும் மற்ற எல்லா வழிகளையும் விட சீனா அமெரிக்காவிலேயே அதிகம் தங்கியுள்ளது. சீனா அதன் முதன்மை ஏற்றுமதிச் சந்தைகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் அதைப்பற்றிய அறிவு போன்றவற்றிற்கு, இன்னமும் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் என்பனவற்றையே முக்கியமாக நம்பியுள்ளது.

அதன் பெரும்பாலான இறக்குமதிகள் யாவும் கப்பல் மூலம் கடல் வழியாகவே நடைபெறுவதால், ஒரு பாரிய மோதல் உண்டாகி, அமெரிக்கா ஒரு கடல் வழி முற்றுகை, மேற்கொள்ளும் சாத்தியம் ஏறபட்டால் சீனா தீவிரமாக பாதிக்கப் பட்டுவிடும்.

சீனா கடல் வழியான இறக்குமதிகளில் தங்கியிருப்பதை குறைப்பதற்காக மூலப் பொருட்களை, மத்திய ஆசியா, ரஷ்யா, அல்லது பர்மா போன்ற அதற்கு அடுத்துள்ள நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து பெறுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

மூன்றாவதாக, சீனா எதிர்கொள்ள வேண்டியது அமெரிக்காவை மட்டுமல்ல ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் ஒருவேளை இந்தியா உட்பட, அமெரிக்காவின் ஆசிய கூட்டாளிகளான நாடுகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதன்படி சீனாவுக்கு குறைந்த பட்சம் ஒரு பெரிய சக்தியான கூட்டாளியும் மற்றும் சில சிறிய கூட்டாளிகளும் உதவிக்கு தேவைப்படும்.

சீனா அமெரிக்காவுடன் ஒரு தீவிரமான சவாலை பெரிய அளவில் எதிர்கொள்ள துணிந்தால், பீஜிங்கும்




**ஒரு போர், சமூகத்துக்கு தாங்க முடியாத அளவுக்கு இன்னல்கள் ஏற்படாவிட்டால் அவர்கள் அதனுடன் வாழ்வதற்கு கற்றுக் கொள்வார்கள். இதன்படி மூன்றாம் உலகப் போர் மற்றொரு முப்பது அல்லது ஐம்பது வருடத்துக்கு நடைபெறும்?**

மற்றும் மொஸ்கோவும் சேர்ந்து ஒரு ஈரோ ஏசிய பூகோள அரசியல் கூட்டணி உருவாகும் சாத்தியம் உள்ளது. இப்போது இது ஏற்கனவே நடைபெற்று வருகிறது, ஆனால் அதற்கு இன்னமும் சிறிது .காலம் எடுக்கும்.

அடிப்படையானதும் முக்கியமானதுமான காரணம்: அடுத்து வரவுள்ள 15 முதல் 20 வருடங்கள் வரை ஒரு பெரிய யுத்தம் ஆசியாவில் நடப்பது மிகவும் அரிது ஏனெனில் பீஜிங் ஒரு எச்சரிக்கையான விளையாட்டை விளையாடி வருகிறது. ஒரு இராணுவ மோதல் ஏற்பட்டால் கூட அது மிகவும் குறுகியதாகவே இருக்கும், மேலாதிக்கம் நிறைந்த அமெரிக்கப் படைகளால் சீனாவிரைவிலேயே தோற்கடிக்கப்பட்டுவிடும்.

எனினும் 2030ஆம் ஆண்டளவில் இந்தச் சமநிலை கணிசமானளவு மாற்றம் பெற்றுவிடும். சீனா பின்வருவனவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றினால் அது மாற்றம் பெற்றுவிடும் 1) சீனா, அமெரிக்காவுடனான இராணுவ இடைவெளியை நிரப்புதல், 2) அதன் பொருளாதாரத்தை மேற்கத்தைய சந்தை வாய்ப்பு மற்றும் வெளிநாட்டு மூல வளங்களில் சார்ந்திருப்பதை குறைத்தல், 3) அதன் சொந்தகூட்டணிக் கட்டமைப்பை ஏற்படுத்தல்.

### இதன்படி, 2034இல் நடக்கவிருக்கும் காட்சியை நாம் கற்பனை செய்து பார்ப்போம்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் தைவானுடன் அதன் மீள் இணைப்பை பூர்த்தி செய்த சீனாவுக்கு, இந்தியாவின் விரிவான சக்தியின் வளர்ச்சி கவலையளிப்பது அதிகரித்து வருகிறது. 2030இல் உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு என்கிற பெயரைக் கைப்பற்றுவதில் சீனாவை இந்தியா முந்திவிடும்.

இன்னும் முக்கியமானதாக, தனது மிகவும் இளைய மக்கள் தொகை மற்றும் இயக்க ஆற்றல் மிக்க பொருளாதாரம் என்பன ஏற்கனவே இந்தியாவில் சீனாவைக் காட்டிலும் வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. இந்தியா தனது ஆயுதப் படையை தீவிரமாக நவீனப்படுத்தி வருகிறது, அது இன்னும் சில வருடங்களில் சீனாவுக்கு மிகப் பெரிய சவாலை வழங்கப் போகிறது.

ஆசியாவின் முதன்மை ஸ்தானத்தை பெறுவதற்கு இந்தியா-சீனா இடையே நடக்கும் போட்டி அதன் புதிய உச்சத்தை எட்டியுள்ளது, புதுடில்லி தனது படைபல இடைவெளியை குறைப்பதற்கான வாய்ப்பை எட்டுவதற்கு முன்னரே பீஜிங் அதை தட்டிக் கொள்ள முயற்சிக்கிறது.

இது 1914இல் ரஷ்யாவின் மூலோபாய திறன்கள் முறையாக அதிகரிப்பதை யிட்டு ஜேர்மனி கவலைப்பட்டதுடன், சரஜிவோ நெருக்கடியின் எழுச்சி, போருக்கு சாதகமாக முடிவுசெய்ய பேர்லினுக்கு பங்களிப்பும் நல்கிய சம்பவத்தை ஒத்ததாகும்.

இந்தியர்கள் திபெத் விடயத்தில் குறுக்கிடுகிறார்கள் மற்றும் சர்ச்சைக்குரிய ஹிமாலய எல்லைகள் முழுவதும் அடுத்தடுத்து தாக்குதல்கள் நடைபெறுகின்றன, சீனப் படைகள் இந்தியாவின் கடல் மற்றும் வான் தளங்களைத் தாக்குகிறார்கள். நிச்சயமாக சீனாவால் ஏற்பட சாத்தியம் உள்ள ஒரு தாக்குதலை தடுக்கும் காப்பீடாக, 2031இல் டோக்கியோவும் மற்றும் புதுடில்லியும் ஒரு பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கையை நிறைவேற்றி இருப்பதால், இந்தியா மீதான தாக்குதல் என்றால் அது ஜப்பான் மீதான தாக்குதலுக்கு சமம்.

இந்தியாவுடனான ஒரு மோதல் நடக்கும் அதே சமயம் சீனாவின் கடற்படை ஜப்பானுக்கு சொந்தமான சர்ச்சைக்குரிய செங்காகு தீவை கைப்பற்றியதுடன் றைக்கியு தீவை கைப்பற்றவும் முயற்சிக்கிறது.

2032இல் ஜப்பான் - இந்திய ஒப்பந்தம் மற்றும் 2029இல் ஜப்பான் ஒரு அணு ஆயுத நாடாக மாறியது ஆகிய காரணங்கள் சீனாவை அச்சமடையச் செய்யும் என எதிர்பார்த்து அமெரிக்கா, ஜப்பானில் உள்ள தனது படைகளை விலக்கிக் கொண்டது.

தனது பங்குக்கு சீனர்களும் ஒரு சூதாட்டத்தில் ஈடுபட்டார்கள், அமெரிக்கா ஒரு புதிய தனிமைப்படுத்தப்பட்ட முறையில் இருப்பது போல தோன்றுவதால், ஜப்பானின் பக்கத்தில் ஈடுபடாது என்பது அவர்களது நம்பிக்கை.

இருந்தும் ஒரு சிறிய தயக்கத்தின் பின் அமெரிக்கா சீனாவுக்கு எதிரான போரில் இறங்குகிறது. இது 1914ஆம் ஆண்டின் நிகழ்வுகளின் ஒரு மறு நடப்பை போல உள்ளது, ஜேர்மனி, தான் பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக போரை நடத்தினால், லண்டன் அதில் தலையிடாது எனக் கணக்குப் போட்டது.

அமெரிக்காவின் இரண்டு பசுபிக் பிராந்திய நட்பு நாடுகளான அவுஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் அதேபோல மூன்று நேட்டோ அங்கத்தவர்களான கனடா, பிரித்தானியா மற்றும் போலந்து என்பன சீனாவுடன் யுத்தம் பிரகடனம் செய்கின்றன. இதன்படி சீன எதிர்ப்பாளர்களான அமெரிக்காவின் இந்தோ - பசுபிக் கூட்டணிகளான இந்தியா, ஜப்பான் மற்றும் ஏனைய நண்பர்களும் போரில் இறங்குவார்கள்.

இந்த போரில் சீனா தனியாக இல்லை, 2025இல் ஒரு கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தமான அரசியல் - இராணுவ ஆயுத ஒப்பந்தமான சங்காய் ஒத்துழைப்பு அமைப்பான ஈரோ ஏசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சீனா, ரஷ்யா, பெலாரஸ், கஸகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், ரேர்க்மெனிஸ்தான், போன்ற நாடுகள் அதனுடன் உள்ளன. 2033இல் மொங்கொலியாவும் இதனுடன் இணைய நிர்ப்பந்தப் படுத்தப்பட்டது.

ரஷ்யா மூலப் பொருட்கள் மற்றும் இராணுவ வன்பொருட்கள் என்பனவற்றை வழங்குவதுடன், அதேபோல போர் விமானிகள் மற்றும் ஆளில்லா விமானங்களை இயக்குபவர்கள் போன்ற சிறிய அளவிலான இராணுவ ஆட்களையும் வழங்கி, வடக்குப் புறமாக சீனாவை பாதுகாக்கும்.

இதைத்தவிர இந்தோ - பசுபிக் அரங்கில் ரஷ்யாவின் நேரடித் தலையீடு குறைவாகவே இருக்கும்.

2027முதல் வடக்கு மற்றும் தெற்கு கொரியா ஒரு கூட்டமைப்பாக உள்ளது, அது இந்தப் போரில் அணி சேரவில்லை. பிலிப்பைன்சைத் தவிர ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகள் தங்களது நடுநிலையை அறிவித்தன, அதே நடைமுறையை ஆபிரிக்க, லத்தீன்அமெரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளும் கடைப்பிடித்தன.

போர் வகையில் உலகப் போர் 3, இருபதாம் நூற்றாண்டின் பாரிய மோதல்களிலிருந்தும் மிகவும் வித்தியாசமான ஒன்றாக இருக்கும். ஒரு விடயத்தில் பிரதான போராளிகள் அணு ஆயுத பலம் கொண்டவர்களாக இருப்பார்கள். அணு ஆயுதங்களின் சரியான பயனை அறிந்திருப்பதனால் அதன் விளைவு ஒரு பரஸ்பர முன் ஒழிப்பை ஏற்படுத்தும், சண்டையிடும் பிரிவினர்கள் அவற்றை பயன்படுத்துவதை அது தடுத்திருக்கும்.

அது இரண்டாம் உலகப் போரினைப் போல இருக்காது. சண்டையிடும் குழுவினரிடம் பெருந்தொகையான இரசாயன ஆயுதங்கள் கையிருப்பிருந்தாலும் எதிர் தாக்குதலுக்குப் பயந்து அவற்றை அவர்கள் பயன்படுத்த மாட்டார்கள்.

இந்த மரபு ரீதியான போரின் செயல்பாட்டில் அணு ஆயுதங்கள் கூட மிதமான விளைவையே ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. ஒரு நாடு குறிப்பாக அதன் இதயப் பகுதி பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப் பட்டோ அல்லது குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள நிலையில் அது, அணு ஆயுதங்களை அதன் இறுதி நிலையில் பயன்படுத்தும் சாத்தியம் இருக்கும்.

இதை புரிந்து கொள்ளும் மற்றப் பகுதியினர் தங்கள் எதிர் தரப்பினரை இப்படியான ஒரு நிலைக்கு தள்ளிவிடமுனைய மாட்டார்கள். இதன் காரணமாக பிரதான யுத்த வலயம் வேண்டுமென்றே அதிக மக்கள் பரம்பல் உள்ள இடங்களையும் மற்றும் தொழிற்சாலைப் பிரதேசங்களையும் தவிர்த்து அதற்கு அப்பால் புறவலயங்களில் போர் வலயங்களை வரையறுக்கும் நிலை ஏற்படலாம்.

அதற்கு மேலும் ஆசியாக் கண்டத்தில் தரைவழியாக ஒரு பெரிய எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவது அநேகமாக எப்போதும் ஒரு தோல்வி முயற்சி, என்கிற கடந்தகால படிப்பினையை நினைவில் கொண்டு இராணுவ உத்திகள் மாற்றியமைக்கப்படும். இந்த அனுமானங்கள் யாவும் கடல், வான் மற்றும் தரிசான மலைப் பகுதிகள் மற்றும் வெளி இடங்கள் அதேபோல இணையங்கள் என்பனவற்றை மூன்றாம் உலகப் போரின் முக்கிய யுத்த களங்களாக அமைக்கும்.

மூன்றாம் உலகப் போரின் மற்றொரு விசித்திரமான அம்சமாக, எதிரிகள் இடையே பயனுள்ள சேவைகளை பரிமாறுவதற்காக இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச அங்கங்கள் தொடர்ந்து இயங்கி வருவார்கள். பல தசாப்தங்களாக சர்வதேச நிறுவனங்களைக் கட்டியெழுப்பியது முற்றிலும் பயனற்றுப் போய்விவில்லை என்பதை இது நிரூபிக்கும்.

யுத்தத்தை தடுப்பதில் சர்வதேச நிறுவனங்கள் தோல்வியடைந்ததால் குறைந்த பட்சம் போரின் அளவை மட்டுப் படுத்தவும் மற்றும் அதன் விளைவை நிதானப்படுத்தவும் அவை முற்படும்.

இந்தக் காரணத்தால் கடந்த நூற்றாண்டுகளில் இடம்பெற்ற மொத்த யுத்தங்களைக் காட்டிலும் மூன்றாம் உலகப் போர், ஸ்பானிய தொடர்ச்சி அல்லது 18ம் நூற்றாண்டின் ஏழு வருட யுத்தங்கள் என்பனவனற்றை அதிகம் ஒத்ததாகவும் இருக்க முடியும். **(18ஆம் பக்கம் பார்க்க)**

# மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கவேண்டும்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுமக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவரே பொது வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

பொது வேட்பாளர் ஓர் பெயரளவு வேட்பாளராக இருக்கக் கூடாது யாரும் பொது வேட்பாளர் ஒருவரை பரிந்துரை செய்ய முடியும் எனினும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மேலும் மக்களின் தேவைகளை அறிந்து செயற்படக் கூடிய ஒருவருக்கு மட்டுமே ஜனநாயகக் கட்சி ஆதரவளிக்கும் எனவும், குறுகிய கால தேவைகளின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதில் உடன்பாடில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் எதனையும் அடைந்து கொள்ள விரும்பியதில்லை. மக்களின் நலன்களை உறுதி செய்வதனை நோக்கமாகக் கொண்டே பொது வேட்பாளர் நியமிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பிழையான வழியில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்ற்ம் சுமத்தியுள்ளார்.

வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் தேர்தல் ஆணையாளர் பதவியொன்றில் பயனில்லை எனவும் உரிய முறையில் தமது கடமையை ஆற்ற முடியாவிட்டால் அவர் பதவியை விட்டு விலகிவிட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நியாயமான முறையில் பக்கச்சார்பற்ற தேர்தல்களை நடாத்த தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரமும் பொறுப்பும் இருப்பதாகவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலத்திரனியல் அடையாள அட்டை வரவேற்கிறார் பிரதமர்

(கொழும்பு)



இலத்திரனியல் அடையாள அட்டை முறைமை மிகவும் சிறந்தது என பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டைக்கான தகவல்களை திரட்டும் போது நபர்களின் அந்தரங்கத்திற்கு பாதுகாப்பு ஏற்படக் கூடிய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. புதிய அடையாள அட்டையின் ஊடாக, நாடும்மக்களும் பாதுகாக்கப படுகின்றனர். இன்று பலர் பல்வேறு தேவைகளுக்காக சாரதி அனுமதிப் பத்திரத்தையே சமர்ப்பிக்கின்றனர்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக தரவுத் தளமொன்று உருவாக்கப்படும்.

15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

# உயர்ரக மதுபானம் வைத்திருந்த மலேசிய வாசிகளுக்கு விளக்கமறியல்


*48 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 5 விஸ்கி போத்தல்களுடன் கைது செய்யப்பட்ட மலேசிய பிரஜைகள் இருவரையும் செப்ரெம்பர் 03 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

அவ்விருவரும் குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரில் பெண்ணொருவரும் அடங்குகின்றார். கடந்த 19ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ள இவர்கள், 5 நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து போலி கடனட்டைகள் மூலம் இந்த விஸ்கி போத்தல்களை கொள்வனவு செய்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள 5 நட்சத்திர ஹோட்டல்கள் ஐந்திலிருந்து இந்த 5 விஸ்கி போத்தல்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை தலா 9 இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மலேசியர்களை கைது செய்த குற்றத்தடுப்பு பிரிவினர், அவர்களிடமிருந்து 25 போலி கடனட்டைகளையும் விஸ்கி போத்தல்களையும் கைப்பற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கையில் புற்றுநோயினால் வருடாந்தம் 8.8 வீதமானோர் மரணம்



(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் மரணிப்பவர்களின் எண்ணிக்கையில் புற்றுநோய் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை 8.8 சதவீதமாகும் என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. புத்திக பதிரணவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்த பிரதி அமைச்சர், 1985 ஆம் ஆண்டு 283 பேரும் 1995, ஆம் ஆண்டு 341 பேரும் 2005, ஆம் ஆண்டு 523 பேரும் 2012 ஆம் ஆண்டு 677 பேரும் புற்று நோய்க்கு இரையாகியுள்ளனர். மேலும் இக்காலப்பகுதியில் ஓர் இலட்சம் பேருக்கு ஒப்பீட்டளவில் 1985 ஆம் ஆண்டு 5,012 பேரும், 1995 ஆம் ஆண்டு 7,325 பேரும், 2005 ஆம் ஆண்டு 13,372 பேரும் 2012 ஆம் ஆண்டு 12,550பேரும் ஒரு இலட்சம் பெணகளுக்குள் ஒப்பீட்டளவில் 1985 ஆம் ஆண்டு 2,448 பேரும் 1995 ஆம் ஆண்டு 3,875 பேரும் 2005 ஆம் ஆண்டு 7,314 பேரும் 2012 ஆம் ஆண்டு 7,953 பேரும் இறந்துள்ளனர்.

மேலும் ஒரு இலட்சம் ஆண்களுக்குள் ஒப்பீட்டளவில் 1985 ஆம் ஆண்டு 2,564 பேரும் 1995 ஆம் ஆண்டு - 3,450 பேரும் 2005 ஆம் ஆண்டு 6,058 பேரும் 2012 ஆம் ஆண்டு 4,578 பேரும் புற்றுநோய்க்கு இரையாகியுள்ளனர். அந்தவகையில்இலங்கையில் வருடாந்தம் மரணிப்பவர்களின் எண்ணிக்கையில் புற்றுநோய் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை 8.8 சதவீமாக உள்ளது என்றார்.

# எபோலாவின் தாக்கத்தால் நுழைவு வீசா இடைநிறுத்தம்

(கொழும்பு)

எபோலா வைரஸ் தாக்கத்தை அடுத்து இலங்கைக்கு வருகை தந்தவுடன் வழங்கப்படும் நுழைவு வீசா வழங்கும் நடைமுறை தற் காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவைச்சேர்ந்த நான்கு நாடுகளிலிருந்து வருகைதருவோருக்கான நுழைவு வீசா வழங்கும் நடைமுறையே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நைஜீரியா, சியரா லியோன், மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளிலிருந்து வருகைதருவோருக்கான நுள்ழவு வீசாவே மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த நடைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# ஜப்பான் மண்சரிவுக்கு இலங்கை இரங்கல்



ஜப்பானில் இடம்பெற்ற மண்சரிவிற்கு இலங்கை அரசாங்கம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் இடம்பெற்ற மண்சரிவில் 39 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹிரோஷிமா நகரில் இடம்பெற்ற மண் சரிவு அனர்த்தம் கவலையளிப்பதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இந்த தருணத்தில் ஆழ்ந்த இரங்கலை அரசாங்கம் மற்றும் மக்களின் சார்பில் வெளியிட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கூடிய விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இவ்வாறான சவால்களிலிருந்து ஜப்பானிய மக்கள் மீண்டெழுவார்கள் என வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# விஞ்ஞானத்துறையை முன்னேற்றும் வகையில் பல்கலைக் கல்வியில் மாற்றம் வேண்டும்

## பிரதி நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

விஞ்ஞானத்துறையில் பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை முன்னேற்றி அவர்களை பல்கலைக்கழகத்திலும் இணைத்துக் கொள்வதற்கு ஏதுவாக பல்கலைக்கழக கல்வியில் மாற்றம் ஏற்படவேண்டும் என பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்.அவர்கள் செல்லும் நாடுகளில் கல்வி முறையானது இலங்கையில் முன்னெடுக்கப்படும் கல்வி முறைமையுடன் ஒப்பிடும் போது பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

விசேடமாக நடுத்தர குடும்பத்தினர் தமது குழந்தைகளின் கல்விக்காக பாரியளவில் நிதியை செலவிடுகின்றனர்.எமது பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் அவர்களை இணைத்துக்கொள்வதற்கு காணப்படும் சிக்கல்களே காரணமாகவுள்ளன. விஞ்ஞானத்துடன் முன்னேறும் நபர்களை இணைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக கல்வியில் மாற்றம் ஏற்படவேண்டும்.

அவ்வாறு இல்லையெனின் அந்த மாணவர்கள் சோர்வடைவார்கள். எனவே பெற்றோர்களின் செலவில் வெளிநாடுகளுக்குச் சென்று கல்விகற்க நேரிடுகின்றது.இலங்கையின் கல்விக் கொள்கையில் காணப்படுகின்ற சிக்கல்களே இதற்கு கார்ணமாகும்.இலங்கையை கல்வியின் கேந்திர நிலையமாக மாற்ற வேண்டுமாயின் கல்விக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.எமது அடுத்த கட்டம் அதுவாகத்தான் இருக்கும் என்றார்.



# ராடர் வேகக் கருவிகள் நீக்கம் நெருக்கடியில் போக்குவரத்து பொலிஸார்



(கொழும்பு)

இலங்கையில் அளவுக்கு அதிகமான வேகத்தில் செல்கின்ற வாகனங்களை பிடிப்பதற்கு ராடார் வேகக் கருவிகளை பயன்படுத்தக்கூடாது என்று போக்குவரத்துப் பொலிஸாருக்கு உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. இதன் காரணமாக அதிகளவான வாகன போக்குவரத்து பொலிஸார் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கவனயீனமாகவும் அபாயகரமாகவும் பயணிக்கின்ற வாகனங்களை பிடிப்பதற்கு வேகக் கட்டுப்பாட்டு கருவிகளை போக்குவரத்து பொலிஸார் இதுவரை பயன்படுத்தி வந்துள்ளனர்.

தற்போது ராடர் வேகக் கண்காணிப்புக் கருவிகளை பயன்படுத்த முடியாதவாறு புதிய உத்தரவொன்றை பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ளது. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான வாகன போக்குவரத்து பொலிஸார் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக இந்த தீர்ப்பை மீள் பரிசீலனை செய்வதற்கான நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.தற்போதைய வாகனப் போக்குவரத்து விதிகளிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அவற்றைத் திருத்துவதற்கான முன்னெடுப்பை இலங்கை போக்குவரத்து பொலிஸ்துறை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வரணி பிரதேச வைத்தியசாலையில்
# ஆண்களுக்கான விடுதி அமைக்க கோரிக்கை

(கொடிகாமம்

வரணி பகுதியில் உள்ள மக்களுக்கு மிகவும் முக்கியமான வைத்தியசாலையாக வரணி பிரதேச வைத்திய சாலை விளங்குகின்றது. இவ் வைத்தியசாலையினை வரணி வடக்கு, மசேரி, இடைக்குறிச்சி கரம்பைக் குறிச்சி நாவற்காடு, குடமியன், தாவாளை, இயற்றாலை, வரணி இயற்றாலை, மந்துவில் போன்ற கிராமங்களை சேர்ந்த 3150 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர்.

இவ்வைத்தியசாலையில் பெண்களிற்கென தனியான வைத்திய விடுதி உள்ளபோதிலும் ஆண்களுக்கு விடுதி வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

இப்பகுதியைச் சேர்ந்த ஆண்கள் சிகிச்சை பெறுவதற்கு இங்கு செல்கின்ற போதும் தங்கி நின்று மேலதிக சிகிச்சைக்காக 15 கிலோமீற்றர் அப்பால் உள்ள சாவகச்சேரி வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு செல்லும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பகுதி மக்களின் நன்மைகருதி வரணி பிரதேச வைத்தியசாலையில் ஆண்கள் விடுதி அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## பனைமரம் தறிப்பு தடுக்கப்பட வேண்டும்



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளான வரணி, மிருசுவில் போன்ற பகுதிகளில் பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்படுவதாவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

5 பனை மரங்களிற்கு பாஸ் நடைமுறை பெற்றுவிட்டு 10 பனைகள் தறிப்பதாகவும் அதனைவிட பெண் பனைகள் தறிப்பது முற்றாகத் தடைசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக பனை மரங்கள் தறிக்கப்படுவதனால் அரிய வளங்களான பனை மரங்கள் இல்லாது போகும் நிலமை ஏற்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர் மேலும் பனை மரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும்போது குறிப்பிட்ட தொகையுடன் பெண் பனை மரமும் தறித்தலுக்கு அனுமதி வழங்காமல் இருக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.(14)

## முரசின் இன்றைய பலன்



(23.08.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 07 ஆம் திகதி.
திரயோதசி திதி / சித்தயோகம்.
பூச நட்சத்திரம் பி.இ. 02.07 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம 09.05 - 10.35 வரை. சுபநேரம 03.05 - 04.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நடைப் பயிற்சியினாலும் உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொண்டதாலும் நீரிழிவின் தாக்கம் குறைவடைதல், தொழில் விருத்திக்காக உதவி செய்யக்கூடிய நபரைத் தேடிச் செல்லல் |
| ரிஷபம் | வெளிநாட்டினின்று உறவுகள் வருவதினால் குடும்பத்தில் ஆனந்தம் தாண்டவமாடல், அரசியல் துறையினர் மக்கள் தேவைகளை அனுதாபத்துடன் கேட்டறிதல் |
| மிதுனம் | காலாவதியான பொருளைப் பெற்றதால் களேபரம் ஏற்பட்டு ஒப்படைக்க முடியாது போய்விடல், ஏலம் போகும் நகைகளை மீட்டெடுத்தல். |
| கடகம் | மனையாளுடன் சுமூகநிலையைப் பேண முயற்சி எடுத்தும் இயலாத நிலைக்கு சனி சந்திரபார்வை என நினைத்து ஆறுதலடைதல், பணத்தட்டுப்பாட்டினால் விவாகம் கைவிட்டுப் போனதை எண்ணி ஆறாத் துயரடைதல் |
| சிங்கம் | குடும்ப முன்னேற்றத்திற்கர்க நோயை அலட்சியம் செய்ததால் தேக நலம் திடீரென பாதிப்படைதல், நகைச்சுவைப் பேச்சினால்' முரண்பட்வந்தவர் உறவு கொண்டாட முன்வருதல் |
| கன்னி | "வேலை பெற்றுத் தருவதாக கூட்டிச் சென்ற நபரினால் பாலியல் துன்புறுத்தல் நிலை தப்பிவிடல். வீணான செலவுகளைக் கைவிட்டு எதிர்கால நன்மைக்காக சேமிப்பில் கவனம் எடுத்தல் |
| துலாம் | காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள முயல்வதைப் போல தேடிவரும் சந்தர்ப்பத்தைக் கைவிட வேண்டாம், உண்மைக்குப் புறம்பான செய்தி எழுதியதால் மனத்துயரும் பதகளிப்பும் ஏற்படல் |
| விருச்சிகம் | தகுதியும் தராதரமும் அனுபவமும் இருந்த போதிலும் விண்ணப்பித்திருந்த பதவி காலை வாரிவிடல், பெற்றோரின் இடைவிடாதவற்புறுத்தலினால் மறுமணம் செய்ய சம்மதத்தைத் தெரிவித்தல் |
| தனுசு | பழைய ஒப்பந்தம் சுமாரான நிலைக்கு இலாபத்தைத் தந்ததால் புதியதில் கையொப்பமிடவிரும்புதல், வீட்டுக் குழப்பத்தினால் நெருக்கடி ஏற்பட்டு பணியக வேலைகளில தடுமாறுதல் |
| மகரம் | வருத்தால் சொத்தின் ஒரு பகுதியை விற்கு தீர்க்க முன்வரல், துணைவி பின் புத்திமதியை சிரமேற் கொண்டதால் ஏற்படவிருந்த பெருத்த மோசடி அற்று விடல் |
| கும்பம் | பகீரதப்பிரயத்தனமெடுத்து தேடுதலின் விளைவாக தொலைந்த ஆபரணம் சுகப்படல், இழுபட்டுக் கொண்டிருந்த 'வீசா' கிட்டியதால் தாயகம் வர எண்ணமிடல் |
| மீனம் | ஆலய நிர்வாகங்கள் மற்றும் நிலையங்களில் பதவிபெற சிபாரிசு செய்தல், உபத்திரம் கொடுத்த நபர் வெளிநாடு சென்றதினால் அச்சம் விலகிவிடல் |

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் சப்பரத் திருவிழாவான இன்று இனிய வாழ்விற்கு ஆன்மீகம் என்னும் விடயம் பற்றி இ.சர்வேஸ்வரா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்

தொடர்ந்து கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை சுழிபுரம் பாரதி கலைமன்றம் ஆகிய பாடசாலைகளின் கலைநிகழ்வுள் இடம்பெறவுள்ளன.

---

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 முதல் 8.15 மணி வரை நடைபெற்று வருகிறது.

சப்பரத் திருவிழாவான இன்று பொன் ஸ்ரீ வாமதேவன் வழங்கும பாட்டு இசையரங்கம் பக்க வாத்தியம் சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## அறிவுறுத்தற் கூட்டம்


(உடுவில்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை இருக்கும் ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தற்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தமிழ் பாடத்திற்கான மேற்படி அறிவுறுத்தற் கூட்டம் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு செல்ல உள்ள ஆசிரியர்கள் அவர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (17)

# நல்லைக் கந்தனுக்கு இன்று சப்பரத் திருவிழா



## வானவரும் போற்றட்டும்

நலந்தரும் நல்லூரான் உற்சவங்கள் சிறக்கட்டும்
உலகமெலாம் இருந்துபக்தர் வந்துஅங்கு கூடட்டும்
சலம்பூவும் தூபங்களும் சரவணன்பால் சொரியட்டும்
தலம் நாடி வருவோரைத் தாங்கியவன் காக்கட்டும்
குலம்காக்கும் குமரனவன் மனக்குன்றில் ஏறட்டும்
மலங்களைய வேலையவன் மனங்களிலே ஊன்றட்டும்
நிலன்தன்மேல் வந்தவனே நெஞ்சங்கள் ஏற்கட்டும்
வலம்வரும் அவனழகை வானவரும் போற்றட்டும்.
பலம்கொண்ட வாழ்வையவன் பாரினோற்கு வழங்கட்டும்
புலர்பொழுதின் பூசைமணி புவியெல்லாம் கேட்கட்டும்
விலகாத வெவ்வினைகள் வேல்முனையால் விலகட்டும்
சலனங்கள் போக்கியவன் சாந்தியினை அருளட்டும்
சொலற்கரிய அவன்புகழை சொல்லுபவர் பெருகட்டும்
கலக்கமிலாத் தெளிவையவன் கடைக்கண்ணே வழங்கட்டும்
துலங்குமவன் திருவருளால் தொலைந்தவைகள் கிட்டட்டும்
திலகமென அவனெல்லோர் மேனியிலும் திகழட்டும்

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

## சண்முகப் பெருமானே

சப்பரத்தி லேறிவருஞ் சண்முகனை நல்லூரில்
எப்பொழுதுங் காண இயலாது-தப்பாது
பாசங் குறுகப் பரம்பொருளோ டான்மாவும்
நேசமுறுங் காட்சியது காண்

-நல்லை கந்தன் பாமாலை-

## வரம்தா முருகா!

வேள்வியைத் தடுக்க முடியாமல் போய்ச்சுதே
வாள் வீச்சுக்களே வாழ்வாகப் போய்ச்சுதே
கேள்விகளே நம்வாழ்வில் மிஞ்சுவதாச்சுதே
கோடிபணம் தான் நமக்குக் குறிகளாச்சுதோ
தோள்மீது பேராசைச் சுமைகளாச்சுதே
தொற்றுகின்ற நோய்களின் விலாசங்களாச்சுதே
ஆள்மீது ஆள்மீது அடிமையென்றாச்சுதே
ஆரவாரமின்றி உன்னைப்போல் வரம்தா முருகா

- கே.எஸ்.சிவஞானராஜா- கொக்குவில்

## சப்பரத்தில் காட்சிதா

வள்ளி தெய்வயானை மணாளனே
சப்பரத்தில் வந்தமர்ந்து அருள்தா மருகா
சப்பரக் காட்சி காண கந்தா
கண்கோடி வேண்டுமையா சண்முகா
வேல்தனைக் கையில் ஏந்திய வேலாயுதா
வேண்டும் வரம் தருவதற்கு சப்பரத்தில் காட்சிதா
ஆனைமுகன் தம்பியாக மிளிர்பவனே
மயில்தனில் உலகை வலம் வந்த முருகனே

-எஸ்.சேரன்- அச்சுநகர்.

## சப்பரத்தில் கந்தனவன்!

அழகான சப்பரத்தில் கந்தனவன் அருள்பெற
அடியார்கூட்டம் அலைமோதும் நல்லூரிலே
அரோகரா என வணங்கிடும் அடியாரின்
அனைத்து குறைகளையும் போக்கிடுவாயே!

-எஸ்.துர்க்கா- நல்லூர்

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது.

தென்னாபிரிக்கா, சிம்பாவே அணிகளுக் கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று முன்தினம் சிம்பாப்வேயின் ஹராரேயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்டன் சிக்கும்புரா 90, சிகாண்டர் ரசா 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டி லங்க் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 27.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் குயின்டன் டி கொக் 84, பிளிசஸ் 40 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 3-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக்கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை குயின்டன் டி கொக் தெரிவு செய்யப்பட்டார்.

## மஹேலவுக்கு முத்திரை

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர் மஹேல ஜெயவர்தன கிரிக்கெட் விளையாட்டிற்கு ஆற்றிய சேவையை பாராட்டி நினைவு முத்திரை யொன்றை வெளியிட தபால் சேவைகள் அமைச்சு விருப்பம் தெரிவித்துள்ளது.


இலங்கை கிரிக்கெட் இது தொடர்பிலான வேண்டுகோளை எமது அமைச்சுக்கு முன்வைத்தால் அதனை நடைமுறைப்படுத்த அமைச்சு தயாராகவிருப்பதாக தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரணதுங்க தெரிவித்தார்.

தபால் சேவைகள் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியர்ளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்குகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற மஹேல ஜயவர்தனவின் சாதனைகளை வைத்தே இந்த நினைவு முத்திரை வெளியிட எமது அமைச்சு ஆர்வம் காட்டுகிறதெனவும் அவர் கூறினார்.

இலங்கை கிரிக்கெட்டிற்கும் தாய் நாட்டுக்கும் பெருமை சேர்ந்த மஹேலவை பாராட்டும் முகமாகவே இந்த முத்திரையை வெளியிட விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## நிர்வாணக் கோலம்




இங்கிலாந்து கால்பந்து அணியின் பயிற்சியாளர் மற்றும் முன்னாள் மான்செஸ்டர் அணியின் வீரர் பில் நெவிலின் மனைவி சுகாதார கடையின் விளம்பரத்திற்கு நிர்வாண காட்சி கொடுத்துள்ளார்.


பில் நெவிலின் முன்னாள் மான்செஸ்டர் அணியின் வீரர் ஆவார். இவர் கடந்த 2013 ஆம் ஆண்டு அணியில் இருந்து ஓய்வு பெற்றார். பின்னர் இங்லீஷ் பிரீமியர் லீக் மற்றும் அந்த அணியின் பயிற்சியாளராக இருக்கிறார்.

இவரது மனைவி ஜீலி நெவில், மான்செஸ்டரில் புதிதாக திறக்கப்பட்ட சுகாதார கடைக்கு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, அதன் விளம்பரப் படத்தில் நிர்வாண போஸ் கொடுத்துள்ளார்.

இந்தப் படத்தால் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டதோ இல்லையோ, அவரது கணவரான பில் நெவில் அவரது மனைவியால் அசைவத்தில் இருந்து சைவ உணவிற்கு மாறியுள்ளார்.

தற்போது இங்கிலாந்து அணி மற்றும் பல பிரீமியர் அணிகளுக்கும் அவரது மனைவி அந்த சுகாதார உணவை வழங்கி வருகிறார்.

## மேற்பார்வை செய்வதே என் பணி



(புதுடில்லி)

இந்திய அணியை மேற்பார்வை செய்வதுதான் என் பணியே தவிர, பயிற்சியாளர் பிளெட்சரின் முக்கியத்துவத்தைக் குறைப்பது என் பணி அல்ல என இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இந்திய அணியின் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ரவி சாஸ்திரி அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அணியின் செயற்பாடுகள் அனைத்தையும் கண்காணிப்பதே என் பணி. என்னை இயக்குநராக நியமித்திருப்பதன் மூலம் பயிற்சியாளர் பிளெட்சரின் பணி பாதிக்காது. அவர் தொடர்ந்து தலைமைப் பயிற்சியாளராக இருப்பார். சஞ்சய் பாங்கர், அருண் ஆகியோர் அவருக்கு உதவியாக இருப்பர்.

இன்றைய சூழலில் இந்திய அணிக்கு எனது பங்களிப்பை அளிக்க நினைத்தேன். அதனால் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டேன். இந்த பணி கடினமானதா, எளிமையானதா என்பதைப் பற்றி பதற்றம் அடையவில்லை. எனது பங்களிப்புத்தான் முக்கியம் என்றார்.

## ஆசியா விளையாட்டு கடின சுற்றில் இந்தியா

ஆசிய விளையாட்டு கால்பந்துப்போட்டியில், ஆண்கள், பெண்கள் பிரிவில் இந்திய அணி கடினப் பிரிவில் இடம் பிடித்துள்ளது. தென் கொரியாவில், 17ஆவது ஆசிய விளையாட்டு (செப்ரெம்பர் 19 ஒக்ரோபர் 4ஆம் திகதி) நடைபெறவுள்ளன. இதில் இடம் பெற்றுள்ள கால்பந்து போட்டிக்கான அணிகளின் பிரிவுகள் அறிவிக்கப்பட்டன. ஆண்கள் பிரிவில், மொத்தம் 29 அணிகள் பங்கேற்கின்றன. இந்த அணிகள் 9 பிரிவுகளாக' பிரிக்கப்பட்டன. இதில் இந்திய அணி ஜி பிரிவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,), ஜோர்டான் அணிகளுடன் இடம் பெற்றுள்ளன. இந்தியா சார்பில் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான அணி பங்கேற்கிறது. ஆசிய விளையாட்டில், இரண்டு தங்கம் (1951, 62), ஒரு வெண்கலம் (1970) வென்ற இந்திய அணி, 2012இல் நடந்த ஏ.எப்.சி., சம்பியன்ஷிப் (22 வயது) தகுதிச் சுற்றில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியுடன் மோதியது. இப்போட்டி 1-1 என சமநிலையில் முடிந் தது. 2010இல் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் யு.ஏ.இ., அணி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது.1998இற்கு பின், இரண்டாவது முறையாக ஆசிய விளையாட்டில் பங்கேற்கும் இந்திய பெண்கள் அணி, ஏ பிரிவில் தென் கொரியா, தாய்லாந்து, மாலைத்தீவு என பலம் வாய்ந்த அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. கடந்த 1998இல் நடந்த ஆசிய் விளையாட்டில் இந்திய பெண்கள் அணி, சீனா, சீன தைபே, தென் கொரியா அணிகளுடன் லீக் சுற்றில் தோல்வியடைந்தது.

# முதல் சோதனை முடிந்து நாடு திரும்பிய சேனநாயக்க


(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற் பந்துவீச்சாளர் சசித்திர சேனாநாயக்க, அவுஸ்ரேலியாவில் இருந்து நாடு திரும்பியுள்ளார். அவுஸ்ரேலியா, பேர்த் நகரிலுள்ள மேற்கு அவுஸ்ரேலியா பலகலைக்கழகத்தில் தனது பந்துவீச்சு முறையில் மாற்றங்களைச் செய்து கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார். மேற்கு அவுஸ்ரேலியா பலகலைக்கழகத்தின் டரில் பொஸ்டர், சசித்திர சேனநாயக்கவின் பந்துவீச்சை உயிரியல் இயந்திர தொழில் நுட்பத்தின் உதவி மூலம் மாற்றியமைத்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் பேரவை, சசித்திர சேனநாயக்க பந்தை விதிமுறைகளை மீறி வீசி எறிகின்றார் என்ற சந்தேகத்தின் பேரில் பரிசோதனைக்கு உட்படுத்தியது. அதன்படி அவர்களின் சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் சசித்திர சேனநாயக்க பந்துவீசுவதில் இருந்து தடைசெய்யப்பட்டார். இப்போது இவருடைய பந்துவீச்சு விதிமுறைகளுக்கு உட்பட்டதாக மாறியுள்ளது எனவும் மீண்டும் விரைவில் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பரிசோதனையில் பங்கு பற்றி தனது பந்து வீச்சினை நிரூபித்து போட்டிகளில் விளையாடுவார் எனவும் இலங்கை கிரிக்கெட் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மேற்கு அவுஸ்ரேலியா பலகலைக்கழகத்தின் அறிக்கை வந்ததும் உடனடியாக சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் அங்கரிக்கப்பட்ட இங்கிலாந்து கார்டிப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து அடுத்த கட்ட செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட்டின் தலைமை பயிற்றுவிப்பாளர் ஜெரோம் ஜெயரட்ன, குறித்த அவுஸ்ரேலியா சுற்றுலாவில் சசித்திர சேனநாயக்கவுடன் இணைந்து இருந்து, தேவையான பணிகளை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## அமெரிக்கா ஓப்பன்; வெளியானது அட்டவணை



ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி வருகிற 25ஆம் திகதி நியூயோர்க் நகரில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான போட்டித் தர நிலையில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நோவக் ஜோகோவிச் (சேர்பியா) முதலிடத்தையும், ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 2ஆவது இடத்தையும், பெண்கள் ஒற்றையரில் நடப்பு சம்பியன் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முதலிடத்தையும், சிமோனா ஹலேப் (ருமேனியா) 2ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். இந்த நிலையில் போட்டியில் யார்-யாருடன் மோதுவது என்பது குலுக்கல் மூலம் நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி பெண்கள் ஒற்றையர் முதலாவது சுற்றில் முதல்நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சக நாட்டவர் தரவரிசையில் 103ஆவது இடம் வகிக்கும் டெய்லர் டவுன்சென்டை எதிர்கொள்கிறார். முன்னாள் சம்பியன் ரஷ்யாவின் மரிய ஷரபோவா, சக நாட்டவர் மரிய கிரிலென்கோவுடன் பலப்பரீட்சை நடாத்தவுள்ளனர். ருமேனியாவின் சிமோனா ஹலேப், அமெரிக்காவின் டேனியலி காலின்சுடன் சவாலை ஆரம்பிக்கிறார்.

ஆண்கள் பிரிவில் முதல்நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், ஆர்ஜென்ரீனாவின் டியாகோ செபாஸ்டியனுடன் முதல் சுற்றில் மோதவுள்ளார். இவர் காலிறுதியில் ஒலிம்பிக் சம்பியன் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை சந்திக்க நேரிடலாம். முர்ரே முதல் சுற்றில் நெதர்லாந்தின் ரொபின் ஹாசுடன் மோதுகிறார் 5 முறை சம்பியனான சுவிட்சர்லாந்தன் ரோஜர் பெடரர், தனது முதல் ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவின் மரின்கோ மாடோசெவிச்சை சந்திக்கிறார். இதற்கிடையே தற்போது நடந்து வரும் தகுதிச் சுற்றில் ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் யுகி பாம்ப்ரி, சனம் சிங் வெற்றி பெற்றனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆவரங்கால் மத்தியால் மூத்த வீரர்கள் கௌரவிப்பு



ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் போது யாழ். மாவட்டத்திலுள்ள மூத்த கரப்பந்தாட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர். யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த வாரம் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொட ரின் போது ஆ. நவரத்தினம், ப. ஜெயநிதி, கா. கந்த சாமி, இ.அழகரத்தினம், சி. தர்மராசா, பி. அழகரத் தினம், சி. திரவியநாதன் ஆகியோர் கௌரவிக்கப்பட் டனர். இந்நிகழ்வில் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிக் கௌர வித்தார். கௌரவிக்கப்பட்டோர் விருதுகளுடன் இருப்பதைக் காணலாம். ஏ, பி என இரு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டித் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர், சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி கள் கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93,48)

## அமைச்சு பாராட்டு

இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்கு அரும் பணியாற்றிய துடுப்பாட்ட வீரர் மஹேல ஜயவர்தனவுக்கு விளையாட்டு அமைச்சு பாராட்டு தெரிவித்துள்ளது.

தாய்நாட்டுக்கு இவர் கிரிக்கெட் விளையாட்டு மூலம் புகழைப் பெற்றுக் கொடுத்தவர். கொழும்பு நாலந்த கல்லூரியில் இருந்து கிரிக்கெட் வாழ்வை இவர் ஆரம்பித்தார்.

கிரிக்கெட் விளையாட்டை இவர் உச்சத்தில் வைத்தவர். அவரின் ஆட்டத் திறமை உலகப் பாராட்டைப் பெற்றது. எவருக்கும் அவர் இரண்டாம் தரத்தவர் அல்லர். அவரை தலைசிறந்த விளையாட்டு வீரராக உருவாக்கிய நாலந்தா கல்லூரிக்கும் அவரின் பெற்றோருக்கும் விளையாட்டு இரசிகர்கள் மட்டுமன்றி முழு நாட்டு மக்களின் கௌரவமும் உரித்தாகிறது.


எதிர்கால கிரிக்கெட் பரம்பரையினருக்கு இவரிடம் நிறைய படிப்பினைகள் உள்ளன. அவரை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும். உங்களின் எதிர்கால நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்றும் அமைச்சு அதன் வாழ்த்தில் தெரிவித்துள்ளது. மஹேலவின் சாதனைப் பக்கங்களையும் அமைச்சு ஒவ்வொன்றாக பாராட்டியுள்ளது.

## இன்றைய ஆட்டம்

(கைதடி)

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மயிலிட்டி வள்ளுவர் அணியும், உடுவில் ஆலடி சிந்து அணியும் மோதவுள்ளன. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)




## சுவிஸிற்கு பெருமை சேர்த்த யாழ். வீரர் சுகந்தன்

சுவிஸ் சூரிச் நகரை அண்டிய சிலிரனில் வசிக்கும் யாழ்ப்பாண தமிழ் இளைஞனான சுகந்தன் சோமசுந்தரம் மெய்வல்லுனர் போட்டியில் சுவிஸ் நாட்டின் சார்பில் 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தின் இறுதிப் போட்டியில் (38:53 ளு) 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

சுவிஸில் அண்மையில் ஐரோப்பிய ரீதியில் நடைப்பெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொண்ட இவர், 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பங்குபெற்று, முதல் சுற்றில் (38:56மீற்றர்) 2ஆம் இடத்தைப் பெற்று தெரிவாகி இறுதிப் போட்டியில் (38:53 ள) 4ஆவது இடத்தைப் பிடித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகந்தினி தம்பதிகளின் புதல்வனான இவர், தனது 22ஆவது வயதில் புதிய சாதனையாளர் என்ற பாராட்டைப் பெற்று சுவிஸ் நாட்டு அனைத்து பிரஜைகளின் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

மேலும், 100 மீற்றர் ஓட்டத்தை 10:51 வினாடிகளிலும், 200 மீற்றர் ஓட்டத்தை 21:29 வினாடிகளிலும் ஓடி தனது இளம் வயதில் சுவிஸ் நாட்டின் சாதனை வீரன் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார்.

## வருடாந்த விளையாட்டு விழா

(அச்சுவேலி)

பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 29,30,31 ஆகிய திகதிகளில் பொலிகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் குத்துச் சண்டை, மல்யுத்தம், கம்பியிழுத்தல், கயிறுழுத்தல், பளு தூக்குதல், கிறீஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, ஆண்களுக்கான மரதன் ஓட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கான சைக்கிள் ஓட்டம் (மூன்று சில்லு சைக்கிள் - ஆண் - பெண்) கட்டுமரம் வலித்தல், படகு ஓட்டம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகள் நாளை மறுதினத்திற்குள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வு பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழகத் தலைவர் க. கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (85)

(அச்சுவேலி)

ஆவரங்கால் விவேகானந்தர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது. இதில் சிறார்களின் பல்வேறு வகையான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விவேகானந்தா முன்பள்ளியின் தலைவர் கே. கோபிகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ. பரம்சோதி, சிறப்பு விருந்தினராக வலி•கிழக்கு புத்தூர் பிரதேச தவிசாளர் க. துரைசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோர், விளையாட்டு நலன் சார்ந்தோர், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (85)

## விரைவில் ஜி.ஏ. கிண்ணம்

(யாழ்.)

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் நான்காவது வருடமாக நடாத்தப்படவுள்ள பிரதேச் செயலக பணியாளர்களுக்கான அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிக்கான நிரலிடல்கள் தயாரிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன்படி மென்பந்து கிரிக்கெட் போட்டியே முதலில் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இப்போட்டியில் சாதிப்பதற்காக பிரதேச செயலகங்களைச் சேர்ந்த ஊழியர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. (எஸ்.பி.)

## கருத்திற்கொள்ளப்படாத கெய்லின் ஆதங்கம்

ஒருவர் இறந்த பின்னரே அவரைப்பற்றி நல்ல விடயங்கள் கூறப்படுகின்றன. ஆனால் வாழ்க்கையில் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர் உயிருடன் இருக்கும்போதே செய்யவேண்டும் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார். ஜமேக்கா அரசு மீது நான் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளேன். நான் கேட்பதெல்லாம் கொஞ்சம் நாகரிகம், சிறு அங்கீகாரம் அவ்வளவே. 2 முறை முச்சதங்கள் அடித்துள்ளேன், ஆனால் விமான நிலையத்தில் ஒரு கமரா கூட என்னைப் புகைப்படம் எடுக்க வரவில்லை. இது என்னைக் காயப்படுத்துகிறது. ஜமேக்காவில் மருத்துவமனைகள், பள்ளிகள் என்று நான் நிறைய உதவி புரிந்துள்ளேன், விளையாட்டுத் தூதராக ஜமேக்கா அரசை இருமுறை ஒரு சிறு சகாயம் செய்ய கோரிக்கை வைத்தேன். ஆனால் இருமுறையும் அரசு கண்டுகொள்ளவில்லை.

ஜமேக்காவிற்காக ஒரு துரும்பைக் கூட அசைக்காதவர்கள் நிறைய இந்த அரசினால் பயனடைந்து வருகின்றனர். நான் இலட்சக்கணக்கில் வரி செலுத்தியுள்ளேன். நான் இப்போது கேட்பது சிறு வரி விலக்கு அவ்வளவே. இனி இந்த அரசிடம் எதுவும் கேட்கப்போவதில்லை. ஒருவர் இறந்த பின்னரே அவரைப்பற்றி நல்ல விடயங்கள் கூறப்படுகின்றன. ஆனால் வாழ்க்கையில் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் அவர் உயிருடன் இருக்கும்போதே செய்யவேண்டும். அதனை விடுத்து ஒருவர் உயிர்துறக்கும் வரை காத்திருப்பது ஏன்? பின் ஆகா! இவர் இவ்வளவு பெரிய வீரர், இவர் இத்தனை செய்திருக்கிறார் என்று புகழ்வதில் ஒருவருக்கும் பயனில்லை. இப்படித்தான் நான் உணர்கிறேன், அதை வெளிப்படையாகக் கூறுகிறேன். எனக்கு வருத்தங்கள் இல்லை. இருந்தாலும் அரசுக்கு எனது செய்தி சென்றடைய வேண்டும். நான் ஒன்றுமில்லாமல் வளர்ந்தேன். இப்போது கொஞ்சம் பணம் சம்பாதித்துள்ளேன். இப்போது நான் தைரியமாகக் கேட்கலாம் எனக்கு அந்தக் கார் வேண்டும், இந்த வீடு வேண்டும் என்று. இப்படித்தான் நான் ஆரம்பித்தேன். இன்று ஜமைக்காவின் சிறுபிராயத்தினர் அபாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காக அகாடமி ஆரம்பித்து அவர்களை வழிநடத்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து மன்னார் சென். மேரிஸ் சம்பியன்

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்படும் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந் தாட்டம் மாவட்ட ரீதியாக தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் மன்னார் மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த வாரம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் சென். மேரிஸ் அணியும் சென். தோமஸ் அணியும் மோதின. இதில் சென். மேரிஸ் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சென். மேரிஸ் அணியும் சென். ஏஞ்சல் அணியும் மோதின. இதில் சென். மேரிஸ் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தேசிய மட்டப் போட்டிகள் விரைவில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# அமிர்தலிங்கம் படுகொலைக்கு பிறகு...

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

4

இவைகள் நடந்து கொண்டிருக்கும் போது 1989 நவம்பர் 27இல் எல்.ரீ.ரீ.ஈ முதன்முறையாக வன்னியில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் மாவீரர் நாளை அனுட்டித்தது. அந்தக் கூட்டத்தில் 400 முதல் 500 வரையான அங்கத்தவர்கள் பங்கெடுத்ததுடன்



எல்.ரீ.ரீ.ஈ யின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அதில் உரையாற்றினார்.

இந்த உரை அன்ரன் பாலசிங்கத்தினால் எழுதித் தயாரித்த உரையாக இருக்கவில்லை. தலைவரின் பேச்சினை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்த இளம் புலிகளை கவரும் விதமாக, அவரது பேச்சின் இடையே பிரபாகரன் "நாங்கள்தான் அமிர்தலிங்கத்தை கொன்றோம்" என்று சொன்னார்.

அதைப்பற்றி மேலும் விபரிக்கையில் தமிழ் ஈழ விடயத்துக்கு ஒரு காலத்தில் துணையாக நின்ற அமிர்தலிங்கம் பின்னர் அதற்கு துரோகமிழைத்து விட்டார். தமிழ் ஈழத்தை காட்டிக் கொடுப்பவன் ஒரு துரோகி அவன் கொல்லப்பட வேண்டும் எனப் பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "நாளைக்கு பிரபாகரன் தமிழ் ஈழ இலட்சியத்துக்கு துரோகம் செய்தால் நீங்கள் என்னைச் சுட்டுக் கொல்லுங்கள்" என்றார். பிரபாகரனின் இந்த பேச்சு அடங்கிய காணொளி வெளிநாடுகளில் பரந்த அளவில் விநியோகிக்கப்பட்டது.

இதற்கிடையில் அரசாங்கம் - எல்.ரீ.ரீ.ஈ இடையேயான பேச்சு வார்த்தைகள் கொழும்பில் தொடர்ந்து நடைபெற்றதுடன் ஒரு கட்டத்தில் துணைத் தலைவர் மாத்தையாவும் கூட கொழும்பில் இணைந்து அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டார். அவர் கொழும்பில் வைத்து லங்கா கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் மேர்வின் டீ சில்வாவினால் நேர்காணல் செய்யப்பட்டார். அந்த நேர்காணல் லங்கா கார்டியனில் 1990 மார்ச் 15இல் பிரசுரமாகியது.

இந்த நேர்காணலில் "பல கட்சி முறைக்கு ஆதரவாக நீங்கள் நிற்கிறீர்கள் என்றால் உங்கள் ஆட்கள் ஏன் அமிர்தலிங்கத்தையும் மற்றும் ஏனைய ரி.யு.எல்.எப் தலைவர்களையும் கொன்றார்கள்? என்கிற ஒரு கேள்வி மேர்வின் டீ சில்வாவினால், மாத்தையாவின் முன் வைக்கப்பட்டது.

அதற்கு மாத்தையா இவ்வாறு பதிலளித்தார் - "அவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யின் கருத்துக்கு மாறான கருத்துக்களை கொண்டிருக்காவிட்டால், அவர்கள் கொல்லப் பட்டிருக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் இந்தியாவின் முகவர்களாகச் செயற்பட்டதினால், சுருங்கச் சொன்னால் அவர்கள் துரோகிகளாகவும் மற்றும் கூட்டுச் சதிகாரர்களாகவும் இருந்ததால் அது நடந்தது. ஒரு தேசிய போராட்டத்தில் எல்.ரீ.ரீ.ஈ உள்ளது. அந்த விடயத்துக்கு துரோகமிழைப்பவர்களை கொலையும் செய்யும், யுத்தம் எல்லா இடத்திலும் நடக்கிறது, எங்கும் துரோகிகள் இருப்பார்கள்."

மாத்தையாவின் லங்கா காடியன் நேர்காணலின் குறிப்பைக் கொண்டு கொழும்பிலுள்ள ஊடகவியலாளர்கள் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவிடம் 1990 மார்ச் 22இல் நடைபெற்ற ஒரு ஊடகசந்திப்பில் வைத்து கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள்.

தடுமாறிப்போன ரஞ்சன், இதில் தன்னால் கருத்துச் சொல்ல முடியாது, ஏனென்றால் தான் சாட்சியங்களின்படியே நடந்ததாக பதிலளித்தார். மாத்தையாவின் ஒப்புதலுக்கு மாறாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன எல்.ரீ.ரீ.ஈ அந்தக் கொலைக்குப் பொறுப்பல்ல என்கிற மரியதாசனின் கற்பனையான ஒப்புதல் வாக்குமூலத்தையே தொடர்ந்து அனுசரித்தார்.

அவர் முன்பு வாக்களித்ததைப் போல இந்தக் கொலைக்கு எல்.ரீ.ரீ.ஈ உடந்தையாக இருந்ததா என யோகியிடம் அவர் கேட்டாரா என்று வினாவியபோது, அமைச்சர் பின்னர் தான் யோகியை சந்திக்கவில்லை எனப் பதிலளித்தார்.

அமைச்சர் பங்கேற்ற அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு யோகியும் வந்திருந்தாரே எனச் சுட்டிக்காட்டிய போது, தான் யோகியிடம் அவரைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்ததாகவும் ஆனால் புலித் தலைவர் அவருடன் பேசுவதற்கு முன்பே அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் ரஞ்சன் கடுமையுடன் பதிலளித்தார்.

எனினும் நிருபர்கள் அந்த அழுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடித்தபடி 1990 ஏப்ரல் 5இல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அதே வரியில் கேள்விகளைத் தொடுத்தனர். அதற்கு பதிலளித்த ரஞ்சன் விஜேரட்ன"நான் பத்திரிகை அறிக்கைகளின்படி நடப்பதில்லை. நான் சாட்சியத்தின் படியே நடக்கிறேன். கண்களால் காண்பதைவிட சாட்சியங்கள் அதிகம் காண்பிக்கும்" எனத் திருப்பியடித்தார்.

மேலதிக கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், லங்கா கார்டியனுடனான நேர்காணலில் மாத்தையா அந்தக் கொலைகளை எல்.ரீ.ரீ.ஈ செய்ததை ஒப்புக் கொண்டிருந்தால், பின்னர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு எல்.ரீ.ரீ.ஈயின் துணைத் தலைவரை அதைப்பற்றி விசாரிக்கும்படி தான் கேட்டுக் கொள்வார் எனத் தெரிவித்தார்.

புலிகளின் துணைத் தலைவர் பெருமையுடன் அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டபோதும் அமைச்சர் தொடர்ந்தும் மரியதாஸனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், எல்.ரீ.ரீ.ஈ யின் தொடர்பின்மையை தெளிவுபடுத்துகிறது என திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டே இருந்தார்.

ஒன்றில் யோகியுடன் இந்த விடயம் பற்றி விவாதிப்பது, அல்லது மாத்தையாவிடம் விசாரிப்பதற்காக புலனாய்வு பிரிவினரை ஏற்பாடு செய்வது என ரஞ்சன் விஜேரட்ன வழங்கிய வாக்குறுதிகள் ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

(தொடரும்)

# முதல் அணுகுண்டு வீச்சில் தப்பிப் பிழைத்தவர்!

விடியற்காலை சரியாக 5 மணி 29நிமிடங்கள் 45விநாடிகள். மெக்சிகோ பாலைவனம் ஏற்கெனவே சூடேறியிருந்தது. திடீரென ஒரே நேரத்தில் உலகின் பல பாகங்களிலும் நூற்றுக் கணக்கான சூரியன்கள் உதித்தது போன்று ஒரு வெளிச்சம். அந்த விநாடியில் உலகத்தின் எதிர்காலமே மாற்றத்திற்குள்ளாகியது.

ஆம்! இந்த உலகத்தை அழிக்கும் பயங்கரமான ஆயுதமொன்று மனிதன் கையில் கிடைத்துவிட்டது. உலகத்தையே அழிக்கக் கூடிய அணுகுண்டு தான் அது. மனிதகுலம் தன்னைத்தானே அழித்துக் கொள்ள தன் கைகளால் உருவாக்கிக் கொண்ட ஆயுதம்.

70 ஆண்டுகளுக்கு முன்பு "கிரவுண்ட் ஸீரே" என்றழைக்கப்பட்ட விஞ்ஞானிகள் குழுவொன்று மிகத் திறமையான விஞ்ஞானியான றொபேர்ட் ஓப்பன்ஹீமர் தலைமையில் உலகின் முதல் அணுகுண்டு வெடிக்கும் காட்சியை நடுக்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்தது.

லொஸ் அலோமஸ் பரிசோதனைக் கூடத்தில் 28 மாதங்களாக மிகவும் ரகசியமாக உருவாக்கப்பட்ட திட்டம் இது. இந்தப் பரிசோதனையின் முடிவு என்ன தெரியுமா? வெடித்த உடன் வானத்தை நோக்கி எழுந்த தீப்பிழம்பு 20,000 தொன் டி.என்.டி.யை ஒரே சமயத்தில் பற்ற வைத்தது போல் இருந்ததாம். இரண்டு சதுரமைல் தொலைவுக்கு தரைப் பகுதியில் இருந்தவை அனைத்தும் அழிந்தன. அதாவது லண்டன் நகர பரப்பளவைப் போல் இருமடங்கு. வெடித்தவுடன் இதன் பிழம்பு 40,000அடி உயரத்திற்கு மேலெழும்பியது. இதன் உஷ்ணம் 800 யார் தூரத்திற்கு இருந்த பொருட்களனைத்தையும் உருக வைக்கும் தன்மை கொண்டிருந்தது.

இந்த முதல் அணுகுண்டு வெடிக்கும் போது ஆறு மைல் தொலைவுக்கு அப்பால் நின்றிருந்த இருவர் அப்படியே தூக்கியெறியப்பட்டனர். 300 மைல் தொலைவுக்கு பூமி அதிர்ந்தது. அப்போது நடந்து கொண்டிருந்த இரண்டாவது உலகப்போரை இதன் மூலமாகத்தான் முடிவுக்குக் கொண்டுவர முடியுமென்று அமெரிக்கா கருதியது.

தன்னுடைய கூட்டணி நாடுகளைக் காப்பாற்ற - பசிபிக் அருகில் நெருங்கி விட்ட இரண்டாவது உலக யுத்தத்திற்கு முடிவுகட்ட மீதமிருந்த இரு அணுகுண்டுகளை நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது வீசினால்தான் ஜப்பான் சரணடையுமென்று அமெரிக்கா முடிவு செய்தது.



முதலாவது அணுகுண்டு பரிசோதனை நடந்து முடிந்த மூன்றாவது வாரத்தில் கேணல் போல் டிப்பெட்ஸ், அமெரிக்கப் போர் விமானத்திலிருந்து ஹிரோஷிமா மீது அணுகுண்டை வீசினார். வீசிய பின்னர் அச்சம்பவத்தை பார்த்த அவர், "நாங்கள் என்ன பார்த்தோம் என்பதை நம்புவதற்கே கடினமாக இருந்தது" என்றாராம். அப்போது வீசப்பட்ட அணுகுண்டுகளுக்கு தப்பி பிழைத்த ஐந்து பேர்களில் அண்மையில் 86ஆவது வயதில் காலமான சுடோமு யாமகுச்சியும் ஒருவர். கடைசி காலத்தில் நாகசாகியில் வசித்துவந்த இவர் இரண்டு நகரங்களிலிருந்தும் இரண்டு முறையும் குண்டு வீச்சுக்கு தப்பி பிழைத்தது சுவாரஷ்யமான சம்பவமாகும்.

ஹிரோஷிமாவில் "மிட்சுபிசி" நிறுவனத்தில் அவர் பொறியியலாளராக பணியாற்றி வந்தபோது, இரண்டாம் உலகப்போர் தீவிரமடைந்தது. ஜப்பானுக்கு பாடம் கற்பிக்க நினைத்த அமெரிக்கா, அணுகுண்டுகளுடன் அனுப்பிய போர் விமானம், 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி ஐந்து தொன் எடையுள்ள "Little Boy" என்ற அணுகுண்டை ஹிரோஷிமா மீது வீசிவிட்டுச் சென்றது.

விழுந்தவுடன் பெரும் சத்தத்துடன் சுமார் எட்டுமைல் உயரத்திற்கு பூமியிலிருந்து புகையும் நெருப்புமாக புழுதி மேலெழுந்ததாம். அப்போது யாமகுச்சி ஒன்றரை மைல் தொலைவில் இருந்தார். அந்த அதிர்ச்சி அவரை அப்படியே தூக்கியெறிந்தது. மீண்டும் தரையில் வந்து விழுந்தபோது காதுகளிரண்டையும் கைகளால் பொத்தியபடி தலைகுப்புறப் படுத்துக் கொண்டாராம்.

"என்னுடைய இடது காது வீக்கமடைந்து ரத்தம் வெளியே வந்தது. பயங்கரமான வலி. சூடு பொ[illegible] முடியவில்லை. என்னுடைய முகத்தில் தோல் பொசுங்கியிருந்தது. அணிந்திருந்த சட்டை, காற்சட்டை எல்லாம் கருகிப் போய் உடம்போடு ஒட்டியிருந்தது" என்று யாமகுச்சி விவரித்திருந்தார்.

மெல்ல எழுந்து பார்த்தபோது

# அதிகமும் பாடல்பெற்ற விலங்கினம்

எம்.டி.முத்துக்குமாரசாமி -




சாமுவேல் பெக்கெட் : உற்று நோக்குவதற்கு பூனைகள்



ஜான் போல் சாத்தர் : அந்நியமாதல் பூனை?



ஸில்வியா ப்ளாத் : வாழ்வின் அபத்தம்



பெர்னாட் ஷா : பூனைகளின் தந்திர உலகப் பார்வை

பூனைகளை எனக்கு சுத்தமாகப் பிடிக்காது. ஆனால் பூனைகளின் புகைப்படங்களை விரும்பிப் பார்க்கிறேன் சேகரித்து வைக்கிறேன். பிம்பமாகின்ற பூனைகளிடத்தே மனிதர்களுக்கு ஏதோ ஒரு வசீகரம் உண்டாகிறது. அதனால்தான் கவிதைகளில் பூனைகள் அதிகமும் உலக இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன.

'பூனைக் கவிதைகள்' என்றொரு தொகுப்பு கொண்டு வந்தால் அதுதான் உலக விலங்குகளிலேயே மிகவும் அதிகமாக பாடல் பெற்ற விலங்கினமாக இருப்பது தெரியவரும். **டி.எஸ். எலியட்** மட்டுமே எத்தனை பூனைக் கவிதைகள் எழுதியிருக்கிறார்! லண்டன் வீட்டுக் கூரைகளின் மேல் உரசிச்செல்லும் அதிகா லைப் பனியைப் பார்த்தால் கூட அவருக்கு கால்களை உரசும் மஞ்சள் பூனையோடு தான் ஒப்பிடத் தோன்றும்.

பூனைகள் எழுத்தாளர்களின் கற்பனையை ஆக்கிரமிப்பதற்கான காரணம் **அல்டஸ் ஹக்ஸ்லி** எழுதிய வாக்கியத்தின் மூலம் தெளிவாகிறது. 'காதலோடு தொடர்ந்து வசியப்படுத்த நினைக்கும் மனைவிப்பூனையின் முன்னால் நேரடியாக கொட்டாவி விட்டு தன்னுடைய பேரலுப்பினை ஆணவத்துடன் தெரியப்படுத்தும் சியாமிஸ் பூனையின் தைரியம் எந்த மனிதனுக்கும் வாழ்நாளில் வராது' என்று ஒரு முறை எழுதினார் ஹக்ஸ்லி.

பூனைகளின் பாவனைகளைப் போல மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவற்றின் போதாமைகளை சொல்லக்கூடிய வேறு வகை வெளிப்பாடுகள் நமக்குக் காணக்கிடைப்பதில்லை.

**சாமுவேல் பெக்கெட்** ஒரு சிறு கூடை நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் இரு பூனைகளை உற்று நோக்கும் புகைப்படம் ஒன்றினை பல மாதங்கள் என் கணினித் திரைப் புகைப்படமாக வைத்திருந்தேன். பூனைகளைப் பிடிக்காத எனக்கே உற்று நோக்குவதற்காக என்றே ஒரு பூனையை வளர்க்கலாமா என்று தோன்ற ஆரம்பித்து விட்டது. பெக்கெட்டின் கதாபாத்திரங்களாகிய 'மேர்ஃபி'யும் 'வாட்'டும் பூனைகளை உற்று நோக்கியதால் உருவானவர்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

எஸ்ரா பவுண்டின் மூன்று பூனைகள் அவருடைய காலத்தில் மிகவும் இலக்கியப் பிரசித்தி பெற்றவை. உலகப் போருக்கு பிந்தைய காலகட்டத்தில் பவுண்ட் தேசத்துரோக குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அவரோடு அவருடைய மூன்று பூனைகளும் நீதிமன்ற விசாரணையை சந்தித்தன என்றொரு பேச்சு உண்டு.

**போர்ஹெஸ்** தன்னுடைய பூனையை 'அலெஃப்' என்ற அவருடைய முடிவின்மையின் பெயரால்தான் அழைத்திருக்க வேண்டும். முடிவின்மை அது பாட்டுக்கு சோம்பல் முறித்துக் கொண்டிருக்க இவர் பாட்டுக்கு தன் அக தியானத்தில் ஈடுபடுபவராக இருந்திருக்க வேண்டும்.

**சார்த்தர்** எழுதும்போது பல சமயங்களில் தன் பூனையினை ஒரு கையால் அணைத்துக்கொண்டுதான் எழுதுவார் என்று வாசித்திருக்கிறேன். அது உண்மையாக இருக்கமுடியாது என்றே நான் நினைப்பேன் ஏனென்றால் பூனையுடன் கூட அவ்வளவு அன்னியோன்யமாக உணர்ந்தவர் எப்படி அந்நியமாதலைப் பற்றி எழுதியிருக்க முடியும்?

**ஸில்வியா ப்ளாத்** சிறுமியாக தன் கையில் பூனையுடன் நிற்கும் புகைப்படத்தையும் அவருடைய 'And I a smiling woman.

I am only thirty.

And like the cat I have nine times to die' என்ற வரியினையும் படிக்கும்போது வாழ்வின் அபத்தம் உறுதிப்படும்.

இருந்தாலும் நான் பூனை வளர்க்க நேரிட்டாலோ அல்லது பூனையை ஒரு காதாபாத்திரமாக ஏதேனும் ஒரு படைப்பில் உலவ விட்டாலோ நான் என் பூனைக்கு பெர்னார்ட் ஷா என்றுதான் பெயர் சூட்டுவேன். 'பிக்மாலியனும்' 'அப்பிள் கார்ட்டும்' எழுதிய அவரே பூனைகளின் தந்திர 'உலகப் பார்வையை' இலக்கியத்தில் வெளிப்படுத்தியவர்.

**நகுலனின்** பூனைகள் பற்றி எழுத கை துறுதுறுக்கிறது. ஆனால் நான் எழுதப்போவதில்லை. எழுதுவானேன் எழுதி நண்பர் பேயோனுக்கு 'சேவ் நகுலன்' போல 'சேவ் நகுலனின் பூனை' என்றொரு கவிதை எழுத சந்தர்ப்பம் கொடுப்பானேன்.

---

மிக மிக எளிதாகக் கிடைக்கக் கூடிய பழம் வாழைப்பழம். மிக எளிதாக மலிவாக வாங்கிவிடலாம் என்பதால், அதன் பயன்கள் குறைவு என்று நினைத்துவிடாதீர்கள்.

இரண்டு வாழைப் பழங்களைச் சாப்பிட்டால் அடுத்த 90 நிமிடங்கள் உற்சாகமாக வேலை செய்யலாம். நிறைய விளையாட்டு வீரர்கள் இதற்காக வாழைப்பழத்தைச் சாப்பிடுகிறார்கள்.

மனதில் இறுக்கமா? சோகமா? வாழைப்பழம் சாப்பிட்டால் மன இறுக்கம் நீங்கிவிடும்.


அதிக அளவு விற்றமின் பி இருப்பதால், நரம்புமண்டலம் அமைதியாகிவிடும்.

வாழைப்பழத்தில் உள்ள ட்ரிப்டோபான் என்கிற புரதச்சத்தை நமது உடம்பு சிரோட்டனினாக மாற்றிவிடும். இந்த சிரோட்டனின் மன இறுக்கத்தைத் தளர்த்திவிடும்.

இரத்தசோகை உள்ளவர்கள் வாழைப்பழத்தைச் சாப்பிட்டால் இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபின் அளவு அவர்களுக்கு அதிகரிக்க உதவும்.

நுளம்பு கடித்து அந்த இடத்தில் அரிப்பும் வீக்கமும் ஏற்படும். வாழைப் பழத்தோலின் உள் பகுதியை நுளம்பு கடித்த இடத்தில் தேய்த்தால், அரிக்காது. வீங்காது.

## வாழைப்பழ மகிமை



---

சுற்றிலும் பலர் உயிரிழந்தும், பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதையும் பார்த்த அவர், அன்றிரவு முழுவதும் ஹிரோஷிமாவின் மத்திய பகுதியில் திறந்தவெளியிலேயே காலங்கழித்துள்ளார்.

அன்றைய தினத்தில் மட்டும் சுமார் 80 ஆயிரம் பேர் இறந்ததாகவும் அணுகுண்டு கதிர்வீச்சின் தீக்காயத்தில் அந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 60 ஆயிரம் பேர் உயிரிழந்ததாகவும் பின்னர் தகவல்கள் வெளியாகின.

மறுநாள் விடிந்ததும் நாகசாகியில் உள்ள தன்னுடைய வீட்டிற்குப் போகலாமென்று முடிவெடுத்த யாமகுச்சி எப்படியோ தட்டுத்தடுமாறி அன்றிரவு முழுவதும் வலியுடன் பயணம் செய்து மறுநாள் காலை நாகசாகியைச் சென்றடைந்தார்.

அந்த ஊரில் இருந்த ஒரே டாக்டரை அதுவும் கண் டாக்டர், அவரிடம் சென்று, உடல் முழுவதும் கருகி தொங்கிக் கொண்டிருந்த தோல் பகுதிகளை வெட்டியெறிந்து கண்கள், மூக்கு வாய்ப்பகுதி மட்டும் வெளியே தெரிய உடல் முழுவதும் மருந்திட்டு பாண்டேஜ் செய்து கொண்டு வீட்டிற்குச் சென்றிருக்கிறார். பின்னர் நாகசாகியில் உள்ள தன்னுடைய அலுவலகத்தின் கிளைக்குச் சென்றுள்ளார்.

அன்று 9ஆம் திகதி ஹிரோஷிமாவில் தனக்கு நேர்ந்த அனுபவத்தையும் குண்டு வீசப்பட்டதையும் சொன்ன போது, மேலதிகாரிகள் உட்பட யாருமே நம்பவில்லையாம்.

"நீ ஒரு பொறியியலாளர். ஒரு நகரத்தை அழிக்க எவ்வளவு சக்தி தேவை என்பது உனக்கே தெரியும். நீ மிகவும் குழம்பி போயிருக்கிறாய். வீட்டிற்குப் போய் ஓய்வெடுத்துக் கொள்" என்று அவரது மேலதிகாரி சொல்லி முடிப்பதற்குள் மீண்டும் "Fat Man" என்ற குண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது.


முதலில் வீசப்பட்ட குண்டின் சக்தியை போலவே இதன் வீரியமும் இருந்தது. "இந்தமுறை மரணம் நிச்சயம் என்று நினைத்துக் கொண்டேன். சுற்றிலும் ஒரே புழுதி. ஏற்கனவே என் உடம்பைச் சுற்றியிருந்த பாண்டேஜ் அப்படியே பிய்த்துக் கொண்டு போக உடல் முழுவதும் புழுதி அப்பிக் கொண்டது" என்று இரண்டாவது முறை குண்டுவீச்சின்போது ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தார் யாமகுச்சி.

நாகசாகியில் உடனடியாக இறந்தவர் எண்ணிக்கை 35 ஆயிரம் பேர். அந்த ஆண்டின் இறுதிக்குள் பாதிப்பினால் கொஞ்சம் கொஞ்சமாக இறந்தவர்கள் 35 ஆயிரம் பேர். ஆனால் இந்த முறையும் யாமகுச்சி தப்பித்துக் கொண்டார்.

பின்னர் யாமகுச்சி சொன்னாராம்: "உடனே வீடுதிரும்ப நினைத்தேன். வந்து பார்த்தால் வீடு தரைமட்டமாகியிருந்தது. 9ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரை என்ன செய்தேன்? என்ன சாப்பிட்டேன்? என்பதே தெரியாமலிருந்தேன். அதன் பிறகு எத்தனையோ ஒப்பரேஷன்கள், நோயினால் தாக்கப்பட்ட யாமகுச்சி உயிர்பிழைத்து நேச நாடுகள் கூட்டணியில் சிறிது நாள் வேலை செய்தார். பின்னர் நாகசாகியிலேயே பள்ளி ஆசிரியராக வேலை.

யாமகுச்சிதான் உலகில் முதன் முதலாக வீசப்பட்ட அணுகுண்டின் கொடூரங்களை உலகுக்கு சொன்னவர்; அவர் அண்மையில் காலமானார்.

---



## உலகிலேயே...

- உலகில் அதிகக் காடுகள் உள்ள நாடு பிரேசில்.
- உலகிலேயே மிக அழகான துறைமுகம் அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி துறைமுகம்.
- உலகிலேயே குவைத் நாட்டில்தான் 135 சதுர மைல்களுக்கு எண்ணெய் வயல்கள் காணப்படுகின்றன.
- உலகில் அதிக அளவு விமானங்களை வைத்திருக்கும் நாடு அமெரிக்கா.
- உலகிலேயே முதல் நீளமான கடற்கரை பிரேஸிலில் உள்ள "ரியோ-டி-ஜெனிரோ". இரண்டாவது சென்னை மெரீனா கடற்கரை.!
- உலகிலேயே மிகவும் பெரிய சிறைச்சாலை ரஷ்யாவில் "கார்கோவ்" சிறைச்சாலையாகும். இங்கு ஒரேசமயத்தில் 40,000 கைதிகளைச் சிறை வைக்கலாம்.
- உலகிலேயே மிகவும் சிறிய சிறைச்சாலை "சார்க்" தீவில் உள்ளதாகும். இங்கே ஒருவரை மட்டுமே சிறை வைக்கலாம்.
- உலகிலேயே மிகக்குறைவான எழுத்துக்கள் உள்ள மொழி ஹவாய் மொழிதான். அதில் 12 எழுத்துக்களே உள்ளன.
- "அமெரிக்கன் மியூசியம் ஒப் நச்சுரல் ஹிஸ்ட்ரி" என்ற மியூசியம்தான் உலகிலேயே மிகப்பெரியதாகும்.
- உலகில் துணுக்குப் பத்திரிகையை முதன்முதலில் ஆரம்பித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த "டிவிட்வோல்ஸ்" ஆவார். இவரையே "துணுக்குப் பத்திரிகையின் தந்தை" என்பர்.
- உலகிலேயே முதன் முதலாக டயரியை வடிவமைத்து இங்கிலாந்தில் கி.பி.1816-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதை வெளியிட்ட "ஜோன்லெட்ஸ்" என்பவர் ஸ்டேஷனரி கடையின் உரிமையாளர்!
- உலகிலேயே ஒரே இடத்தில்தான் காண்டாமிருகங்களுக்கான சரணாலயம் உள்ளது. இந்தியாவில், அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள "காசிரங்கா" என்ற இடத்தில் இந்தச் சரணாலயம் அமைந்துள்ளது.
- அமெரிக்காவின் லிங்கன் நகரில் "டி" என்ற பெயரில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. உலகிலேயே ஓர் எழுத்துக் கொண்ட ஆறு இது ஒன்றுதான். மொத்த நீளம் 440 அடி.
- உலகிலேயே மிகப்பெரிய அணைக்கட்டு "சிந்து" ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள "டர்பெலா அணை"தான். இது பாகிஸ்தானிலுள்ளது.
- உலகில் அதிக உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றம் - சீனா, 2,978 உறுப்பினர்களைக் கொண்டது.

# புதிர்ப்போட்டி இல. 03

### புதிர் வினா இலக்கம் 3.1

**பேருந்து பயணிகள்**

ஒரு பேருந்தில் அறுபதில் இருந்து நூறு வரை பயணிகள் பயணம் செய்தனர்.
ஒவ்வொருவரும் அளித்த கட்டணத் தொகை சமமாகவும், முழு எண்ணாகவும் இருந்தது.
மொத்தத்தில் கிடைத்த தொகை ரூபாய் 3895.
பேருந்தில் எத்தனை பயணிகள் பயணித்தனர்?

### புதிர் வினா இலக்கம் 3.2

**தொடர் எண்கள்**

P, Q, R, S, T, U என்கிற ஆறு தொடர் எண்களும் அதனுடைய சரியான வரிசையில் அமைக்கப்பட வில்லை. கீழ்கண்ட விதிகளின் படி அதன் சரியான வரிசையை கண்டு பிடிக்கவும்.

1. Q இன் மதிப்பு P இன் மதிப்பை விட இரண்டு குறைவு.
2. P இன் மதிப்பு ??. இன் மதிப்பை விட மூன்று குறைவு.
3. ?? இன் மதிப்பு ?? இன் மதிப்பை விட இரண்டு குறைவு..

தொடர் எண்களை ஏறு வரிசைப்படுத்துக

## வித்தியாசமான எண் கணித புதிர்

ஒரு எண் {X} அந்த எண்ணை 9 ஆல் வகுத்தால் 8 மீதி வரும், அதே எண்ணை 8 ஆல் வகுத்தால் மீதி 7 வரும், அதே எண்ணை 6 ஆல் வகுத்தால் மீதி 5 வரும், அதே எண்ணை 4 ஆல் வகுத்தால் மீதி 3 வரும், அதே எண்ணை 3 ஆல் வகுத்தால் மீதி 2 வரும், அதே எண்ணை 2 ஆல் வகுத்தர்ல் மீதி 1 வரும், அந்த எண் {X} என்ன?

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ர.குயின்ரன் றொபேட்
தரம் :- 5
பாடசாலை:- யா/ மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.

பெயர் :- ஸ்ரீ.கௌஷிகன்
தரம் :- 7
பாடசாலை:- யாழ்/ வட்டு இந்துக் கல்லூரி.

பெயர் :- ஈ.சுமன்ராஜ்
தரம் :- 9
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

பெயர் :- வி.அனஸ்ரன்
தரம் :- 9
பாடசாலை:- யாழ். ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.

பெயர் :- அ.மற்றில்டா
தரம் :- 6
பாடசாலை:- மானிப்பாய் மகளிர் கல்லூரி.

பெயர் :- கே.நிலவன்
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பூநகரி மகா வித்தியால்யம்.

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.



### புதிர் வினா இலக்கம் 3.3

**கோபியின் ஓட்டப்பந்தயம்**

கோபி ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டான். ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டவர்களில் 1∴5 பங்கு ஆட்கள் கோபிக்கு முன்னாலும் 5∴6 பங்கு ஆட்கள் அவனுக்குப் பின்னாலும் இருந்தனர்.

எத்தனை ஆட்கள் பந்தயத்தில் கலந்து கொண்டனர்?

## 4 ஏமாற்றும் தந்திரமான புதிர் கேள்விகள்

1) சில மாதங்கள் 31 நாட்களில் முடிவடைகின்றன. சில மாதங்கள் 30 நாட்களில் முடிவடைகின்றன. ஒரு வருடத்தில் எத்தனை 28 நாட்களைக் கொண்ட மாதங்கள் உள்ளன?

2) முப்பதை அரைவாசியால் பிரித்து பத்தைக் கூட்ட வரும் விடை எத்தனை?

3) ஓர் குளிரான இரவில் நீங்கள் வீட்டினுள் நுழைகிறீர்கள். உங்களிடம் ஒரே ஒரு தீக்குச்சி மட்டுமே உள்ளது. வீட்டினுள் ஓர் விளக்கு, ஒரு மெழுகுவர்த்தி மற்றும் விறகடுப்பு உள்ளது. நீங்கள் முதலில் எதனை எரியூட்டு வீர்கள்?


4) ஒரு மனிதன் தன் மகனை பாடசாலைக்கு காரில் கூட்டிச் சென்றார். போகும் வழியில் நடந்த கோர விபத்தில் தந்தை அங்கேயே பலியானார். அயலவர்கள் பையனை அவசரமாக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். அங்கு வந்த வைத்தியரோ இது தன்னுடைய மகன் என்றார்! யார் இந்த டாக்டர்?

5) கோழி முதலில் வந்ததா அல்லது முட்டை முதலில் வந்ததா?

### ❋ எண்முறை நியாயித்தல்

எண்முறை நியாயிக்கும் ஆற்றல் தொடர்பான பிரச்சினைகள் எண்கணிதத்திற்கும், அட்சரகணிதத்திற்கும் பொருத்தமான இலக்கங்களை பயன்படுத்தும் ஆற்றலுடன் தொடர்புடையன.

உ+ம் தரப்பட்டுள்ள எண்களுக்கிடையே உள்ள தொடர்புடைமையை விளங்கிக்கொண்டு வெற்றிடத்தை நிரப்புக.




1. 301 2. 308 3. 321 4. 348
5. 356

முதல் இரு முக்கோணிகளில் உள்ள பெறுமதிகளில் கூட்டுத்தொகை சதுரத்தினுள்ளும் சதுரத்தினுள்ள பெறுமதியின் ஆறுமடங்கு பெறுமதி இறுதி முக்கோணியிலும் உள்ளது. அதற்கேற்ப 348 என்பதே விடையாகும்.

### ❋ வெளி நியாயித்தல்

யாதாயினும் ஓர் நிகழ்ச்சி அல்லது வேறுபாடு காரணமாக எதிர்காலத்தில் எற்படத்தக்க விளைவுகள் பற்றிச் சிந்திக்கும் ஆற்றல் வெளி நியாயித்தல் எனப்படும்.

உ+ம் பின்வரும் உருவில் எத்தனை முக்கோணிகள் இருக்கின்றன.

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: ------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு பாடங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

## சென்றவார புதிர்வினாக்களுக்கான விடைகள்

### புதிர் வினா இலக்கம் 2.1

மேற்கண்ட முறைப்படி எந்த எண்ணுக்கு செய்தாலும் விடை 1089 ஆகும்.

### புதிர் வினா இலக்கம் 2.2

37

37×2=74

74×5=370

370- 37 கடைசி விடையிலிருந்து கடைசி எண்ணை நீக்கவும்

### புதிர் வினா இல்க்கம் 2.3

விடை: ¾ கட்டிகள் மூன்று, ½ கட்டிகள் நான்கு; ¼ கட்டிகள் ஒன்று.
மூத்தவனுக்கு இரண்டு ¾ கட்டிகள்
இரண்டாமவனுக்கு ஒரு 3/4 , ஒரு ½ , ஒரு ¼ கட்டிகள்.
இளையவனுக்கு மூன்று ½ கட்டிகள்.

### புதிர் வினா இலக்கம் 2.4

விடை : வேகங்களின் வித்தியாசம் 1 ½ 1 ½
7 ஐ வித்தியாசத்தால் வகுக்க = 7 (12) 14
இருவரும் சந்திக்கும் நாள் = 14 ஆவது நாள்
இருவரும் சென்ற தூரம் = 1 ½ 14 32 14 21 காதங்கள்
= 210 மைல்

### குறுக்கெழுத்துப்போட்டி புதிர் இல -2.5

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | | பா | | சி | | தி | |
| ம | டி | | தி | ல் | லை | வா | ரு | ம |
| | உ | | த் | | யா | | ம | |
| வி | தை | த் | த | | | பெ | ண் | ணை |
| | | | தா | ர | மா | | | |
| க | மு | தி | | | ச | க | ட | ம |
| | லை | | ச | | ற் | | மா | |
| வி | வே | க | ம | ற | ற | | ர | வி |
| | ல் | | ன | | து | | ம | |

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் தீவகப்பகுதியில் சுமார் 191.85 மில்லியன் ரூபா நிதியில் உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டத்திற்கான நிதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்நிதியில் 60 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களில், சனசமூக நிலையங்கள் மற்றும் வீதி புனரமைப்பு மற்றும் பகுதி நிர்மாணிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவற்றுள் நிதி ஒதுக்கப்பட்ட 60 வேலைத்திட்டங்களில் 2013 ஆம் ஆண்டு, 25 வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன எனவும் அதேவேளை, 2014 ஆம் ஆண்டு 16 வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளதுடன் தற்போது 19 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதெனவும் அவர் குறிப்பிட்டார்.

அதில், விஷேடமாக, நயினாதீவு, செட்டிபுலம் போன்ற பிரதேசங்களில் உவர் நீர் தடுப்பு வேலைத திட்டங்கள் சுமார் 8 மில்லியன் ரூபா நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (25)

# பனை அபிவிருத்திச்சபைக்கு ஜப்பான் பிரதிநிதி வருகை

தொண்டர்சேவைத்திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி தொடர்பான 2 வருட கால கடமைக்கு ஜப்பான் நாட்டிலிருந்து செல்வி. யோகோ கவாஸ கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவருடன் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ் அறிமுக நிகழ்வில் சபைத் தலைவர் உரையாற்றுகையில் ஜப்பான் நாடு யுத்தத்தால் அழிவடைந்த பின்பும் மக்கள் தங்கள் நாட்டை கடின உழைப்பால் கட்டி எழுப்பியுள்ளார்கள் 5.S தத்துவத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். நாமும் எமது நாட்டின் மூலவளத்தைப் பயன்படுத்தி எமது நாட்டை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்ல இவரின் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழில் நுட்பத்தை பெற்றுக்கொள்ள எமது பனைசார் சந்தைப் படுத்தல் அனுபவங்களை பரிமாறிக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள செல்வி யோகோ கவாஸ் 14 வருட காலங்களாக சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். இந்துக்கல்லூரி அதிபராக தயானந்தராஜா நியமனம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக ஐயம்பிள்ளை தயானந்தராஜா நியமனம் பெற்றுள்ளார்.

முன்னர் பதவியிலிருந்த அதிபர் வீ.கணேசராஜா ஓய்வுபெற்றதையடுத்து புதிய அதிபராக ஐயம்பிள்ளை தயானந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் (B.Com Hons, PGDE, PGDEM, MEd) ஆகிய பட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றியிருந்த இவர் நேற்று முதல் யாழ். இந்துக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (48)

# 14வய்து சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுவன் நெல்லியடியில் கைது

(வடமராட்சி)

துன்னாலை சக்குச்சம்பாதி பகுதியைச் சேர்ந்த 14வயதுச் சிறுமியை கர்ப்ப மாக்கிய குற்றச்சாட்டில் அதேயிடத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவனை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பெற்றோர்களின் அனுமதியுடன், மேற்படி சிறுவன், சிறுமியைக் காதலித்து ஒன்றாக வாழ்ந்து வந்த நிலையில் சிறுமி கர்ப்பமடைந்துள்ளதுடன் கர்ப்பவதிகள் சிகிச்சையகத்திற்குச் சென்று சிகிச்சை பெற்றும் வந்துள்ளார்.

இச்சிறுமியின் இளமைத்தோற்றத்தை அவதானித்து ஆராய்ந்த குடும்ப நல உத்தியோகஸ்தர் குறித்த சிறுமி 14 வயதுடையவர் என்று அடையாளம் கண்டுகொண்டதையடுத்து கரவெட்டி சுகாதார வைத்தியதிகாரிக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்

தொடர்ந்து அவர் சுகாதார வைத்தியதிகாரி, கரவெட்டிப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

விபரங்களை சேகரித்த சிறுவர் நன்னடத்தை அதிகாரி கடந்த புதன்கிழமை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதுடன் அன்றைய தினமே குறித்த சிறுமியை கைது செய்த நெல்லியடிப்பொலிஸார் மறுநாள் வியாழக்கிழமை காலை சிறுவனையும் வீட்டில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரையும் யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கையில் நெல்லியடிப்பொலிஸார் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (116)



மண்டைதீவு பிரதான வீதிபுனரமைப்புப்பணியின் போது கடற்பகுதியினூடாக ஊடறுத்துச்செல்லும் வீதி யின் இருமருங்கிலும் கல்லிடப்பட்டு புனரமைப்புப்பணிகள் நடைபெற்றுவருவதனைக்காணலாம். (பா)

# வாரம் ஒரு காரம்

## கட்சி சார் நிலைப்புகளுக்கப்பால் ஆட்சி சார் அர்ப்பணிப்புக்கள் தேவை இதுவே இன்று இல்லாததும் இன்றியமையாததுமாகும்...

**ஆட்சிக்கும் ஆசைக்கும் விலை போகும் மனமே!....**
**அழிவின்றி வாழ நீயொன்றும்**
**அலைகடலல்ல!. நிராகரிப்பைக் கண்டு அநீதிக்கு**
**அடிபணியாதே!... அது உனக்கு**
**அவமானம்.**



தமிழ்தேசியம் எனும் போர்வைக்குள் மோசமான ஓர் இனவாதப் போக்கு ஜனநாயகத்திறகப்பால் இன்று தலைவிரித்தாடுகின்றது. இதனால் இருட்டுக்குள் பல இன்னல்கள் எமதினத்தைச் சூழ்ந்து வருகின்றன. இது யார்க்கும் புரியவில்லை.

கட்சிசார் பிரசாரங்களிற்கப்பால் மக்களின் அபிவிருத்தி பற்றி சிந்திக்க வேண்டிய வட மாகாணசபை வறட்டு கௌரவம் பேசி வாந்தியெடுக்கிறது. இலங்கை அரசியலில் இடம்பிடித்து ஸ்திரமான நிலையொன்றை உருவாக்க வேண்டிய கட்டங்களெல்லாம் கடந்து செல்கின்றன.

'இப்படிப் பேசினால் தான் தமிழ் மக்கள் மத்தியில் இருப்பினைத் தக்க வைக்கலாம்' என்று சிந்தித்துப் பேசும் கூட்டமைப்பு மடிந்த போராளிகள் மக்களைக் கூட மறந்து செயற்படுகின்றது.

எத்தனையோ உயிர்கள் எமது மண்ணிற்காக மக்களின் விடிவிற்காக மடிந்து விட்டன. இதற்கேனும் சற்று மரியாதை செலுத்துங்கள்.

தமிழ்த் தலைமைகளை நம்பி தம்முயிரை நீத்த எம் உறவுகள் எதை விரும்பினார்கள்?.. இதையேனும் சற்று சிந்தியுங்கள். சுயலாப அரசியலிற்காக தமிழர் தியாகங்களையெல்லாம் சுட்டெரிக்காதீர்கள்.

இத்தனைக்கும் மத்தியில் வட மாகாணசபையில் எழுந்து நின்று எதிர்க் கட்சிகள் பற்றியும் விமர்சிக்கின்றனராம். இதற்கு என்ன தகுதி உங்களுக்கு இருக்கின்றது?.....

சற்று சிந்தித்துப் பார்த்தால் புரியும். மக்கள் ஆணைபெற்று மாகாணசபையினை வசமாக்கிக் கொண்ட உங்களால் சாதிக்கமுடியாத பல்துருவ மக்கள் அபிவிருத்தி இன்று அவர்களால்தான் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இவர்களும் இல்லையெனில் உங்கள் வெற்று வாய்ச்சப்பலை ஆதாரம் காட்டி, இங்கு வந்த அத்தனை நிதிகளும் தென்னிலங்கையில் தேங்கி நின்றிருக்கும்.

அரசியலுக்கப்பால் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் பல மத்திய மாகாண அரசுகளால் தீர்க்கப்படாது திசைமாற்றங்களிற்கு உட்பட்டுள்ளன. ஒரு சிலரின் மக்கள் அபிவிருத்திசார் கொள்கை அரசியலால் ஆங்காங்கே சில அபிவிருத்திகள் பொசிகின்றன. அதுவும் இல்லையெனில் தமிழ் மக்களின் கெதி அதோ கெதி தான்.

அரசியல் இலக்கு என்பது. கட்சி சார்ந்த விடயம். மக்கள் அபிவிருத்தி என்பது கட்சி பெற்ற அரச அதிகாரம் சார்ந்த விடயம். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கட்சிசார் இலக்கு எதுவாக இருப்பினும் அது மக்கள் அங்கீகாரம் பெற்று மாகாண அரசு எனும் நிலைக்கு வரும் போது மக்கள் அபிவிருத்தியை மையப்படுத்தி அது தொழிற்பட்டிருக்க வேண்டும்.

சம்பந்தர் கட்சி சார்ந்த ரீதியில் மக்கள் ஆதரவைப் பெற வீரவசனம் பேசினாலும் மாகாண முதலமைச்சராக உள்ள விக்னேஸ்வரன் அரசோடு இணைந்து அங்கீகாரங்களைப் பெற முனைந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு எதிர்மாறான அரங்கேற்றங்கள்தான் மாகாணசபையில் இடம்பெற்றன.

இது புரியாமல் இடம்பெற்ற அரங்கேற்றமல்ல. ஆரம்பத்தில் அவ்வாறுதான் நகர ஆரம்பித்தனர். பின்பு தேசியத் தீவிரவாதிகள் சேறுபூசி விடுவார்களோ!.... என்ற பயத்தின் அடிப்படையில் மீண்டும் வீர வசனம் பேச விக்னேஸ்வரனும் ஆரம்பித்துவிட்டார். இதனால் வட மாகாணசபையும் மக்கள் அபிவிருத்திக் கப்பால் கட்சி சார் பிரசார பேசு பொருளாக நகர ஆரம்பித்துவிட்டது.

மாகாணசபை அதிகாரங்களை கட்சிசார் இலக்குகளை அடையவும் அடுத்த தேர்தலிற்கான அங்கீகாரங்களைப் பெறவும் பயன்படுத்த முற்பட்டமையால் தான் அபிவிருத்தி நோக்கி அது நகர மறுத்தது.

மத்திய அரசின் கீழ் உள்ள மாகாண அரசு மக்கள் ஆதரவைப் பெறவேண்டும் என்பதற்காக மறுவிடுதலைப் போராட்டம் பற்றிப் பேசினால் அவர்களிடம் அதிகாரங்களை அள்ளிவழங்க அரசு முற்படுமா?...

இந்த கூட்டமைப்பின் பலவீனங்களை தற்போது அனைவரும் புரிந்து கொள்ள முற்பட்டுவிட்டனர். அன்று அரச எதிர்ப்பினை ஆதாரப்படுத்திப் பல கட்டுரைகளை அன்று எழுதிய அரசியல் ஆய்வாளர் ஒருவர் பேசுகையில், **'தமிழ் தேசியம் எனும் பெயரில் தமிழர் கதை பாடையில் போகிறது'** என்றார். இன்று ஏன் இந்த சலிப்பு உருவாகிறது என்றால், அதுதான் யதார்த்தம்.

எமக்குள்ளேயே எதிரிகள் இருக்க அரசைக் குறை கூறி என்ன பயன்?...

அரச அடக்குமுறைகளிற்கப்பால் தமிழ் தேசியம் பேசி தமிழர் தீர்வினை விற்றுப் பிழைக்கும் கூட்டமைப்பைப்பற்றி பற்றி தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

# யுத்தக்குற்ற விசாரணைகள் காலம் தாழ்த்தப்படுகிறது

## சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

AMNESTY INTERNATIONAL

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகள் காலம் தாழ்த்தப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைளுக்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடாத்தப்படும் விசாரணைகளுக்கும் இலங்கையில் நடத்தப்பட்டு வரும் உள்நாட்டு விசாரணைகளுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இரண்டு தரப்பினரும் ஒத்துழைப்புடன் விசாரணைகளை நடத்தினால் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது. நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே மிகவும் முதன்மையானது என தெரிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்பட்டால் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சர்வதேச பிரகடனங்களுக்கு மதிப்பளிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழு உறுப்பினர்களுக்கு இலங்கை விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்டால் விசாரணைகள் காத்திரமான முறையில் முன்னெடுக்க வழியமைக்கும் என குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

# இளைஞர் மாநாடு

(கொழும்பு)

இலங்கையின் இளைஞர் நாடாளுமன்ற 10 ஆவது அமர்வு எதிர்வரும் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் மஹரகம லங்கா யூத் நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தமுறை அமர்வில் கடந்த ஸ்ரீ லங்கா யூத் நாடாளுமன்ற அமர்வில் கொடுக்கப்பட்ட யோசனைக்கு ஏற்ப இளைஞர் கழக செயற்பாடு நவீன சமூ கத்தின் தேவைகள் அதற்கு தகுந்த வகையில் மீள்திருத்தம் மேற்கொள்ளல் காலத்திற்கு பொருத்தமாகும் பொருத்த மற்றதாகும்" தலைப்புடனான விவாதத்தின் நோக்கமாக அமையவுள்ளது முதல் நாள் விஷேட விருந்தினராக இளைஞர விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும அழைப்பிற்கு இணங்க, இலங்கையிலுள்ள அவுஸ்ரேலிய தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் அதிமேதகு ரொபின் மூடி (Robyn Mudie) இரண்டாவது நாள் விஷேட விருந்தினராக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ ஆகியோர் பங்குபற்றவுள்ளனர் (65)

# நெனசலவுக்கு விருது




உலகின் மிகச் சிறந்த கிராமிய தகவல் தொழில்நுட்பமையமாக தெரிவாகியுள்ள இலங்கையில் இயங்கும் நெனசலவிற்கு வழங்கப்பட்ட விருது, நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் இந்த விருது ஜனாதிபதியிடம் வழங் கப்பட்டது. பில்கேட்ஸின் அறக்கட்டளை நிறுவகத்தினால் இந்த விருது வழங்கப்பட்டது.

110 நாடுகளைச் சேர்ந்த 190 கும் அதிகமான நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியில், நெனசல முதல் இடத்தை பெற்றிருந்தது. இதற்காக 2 ஆயிரத்து 900 இலட்சம் ரூபாய் சண்மானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோப் குற்றச்சாட்டை நிராகரித்தார் அமைச்சர்

(கொழும்பு)


பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கனியவளத் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாக டீசல் வகை ஒன்று அறிமு கப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் கனிய வளத்துறை அமைச்சு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் தனிப்பட்ட தரவுகளை அரசு திரட்டுவது உரிமை மீறலாகும்

## சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி.



இலத்திரனியல் அடையாள அட்டைகளை அறிமுகம் செய்யும் நோக்கில் அரசு மக்களின் தனிப்பட்ட தகவல்களை திரட்டுவது அவர்களின் உரிமைகளை மீறும் செயலாகும் என ஜே.வி.பி சுட்டிக்காட்டியுள்ள்து.

பாதுகாப்புத் தரப்பினர் வீடு வீடாகச் சென்று மக்களின் தகவல்களை திரட்டி வருகின்றனர்.

என்ன காரணத்திற்காக இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுகின்றன என்பது குறித்து தெளிவு படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தகவல்கள் எதற்காக பயன்படுத்தப்படும் என்பது பற்றி தெரியவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. நபர்களின் தனிப்பட்டதகவல்களும் கைவிரல அடையாளங்களும் திரட்டப்பட்டு இலத்திரனியல் அடையாள அட்டை உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலவந்தமான அடிப்படையில் இவ்வாறு மக்களின் தகவல்களை திரட்டுவது உரிமை மீறும் நடவடிக்கையாகும் என சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றவாளிகளை கண்டுபிடிக்கவே இவ்வாறு கைவிரல் அடையாளங்கள் திரட்டப்படுவதாக அளிக்கப்படும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும், நாடு முழுவதில் வாழும் மக்களையும் குற்றவாளிகளாக நோக்கும் அரசாங்கத்தின் கொள்கை பொருத்தமற்றது எனவும் தெரிவித்துள்ளது.

# அடித்து நொறுக்கப்பட்டது ஐ.தே.க.காரியாலயம்



ஊவாவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் காரியாலயமொன்று நேற்று முன்தினம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அருகிலிருந்த மரக்கறி கடை ஒன்றும், ஆட்டோ ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பதற்றம் ஏற்பட்டது. ஊவா பரணகம, கலஹா கம பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் காரியாலயம் மீதே இனந்தெரியாத குழுவினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர் என்று நீதியானதும் - சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்தது. கபே அமைப்பின் மேற்படி கருத்தை நிராகரித்த பொலிஸ் தலைமையக அதிகாரியொருவர், அந்த இடத்தில் ஐ.தே.க.வின் தேர்தல் காரியாலயம் இல்லை என்று தெரிவித்தார். பரணகம பகுதியிலுள்ள மரக்கறி கடை மீதும், அதன் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த ஆட்டோவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இவை தீ பற்றியதா அல்லது தீ வைக் கப்பட்டதா என்பதை உறுதிப்படுத் திக் கொள்வதற்காக இரசாயன பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மரக்கறிக் கடையை நடத்துவதற்கு வாங்கிய ஆட்டோவுக்கு குத்தகைப் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் நிலைமையால் கடையும், ஆட்டோவும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகம் வெளியிடுவதாகவும் குறித்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# புத்தர் சிலைகள் திருட்டு இரு நபர்கள் கைது

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலிருந்து கொள்ளையிடப்பட்ட விலை மதிக்க முடியாத புத்தர் சிலைகள் நான்கையும் ஒரு தூபியையும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின பேரில் இருவரை கைது செய்துள்ளனர்.

தலதா மாளிகையில் சேவை செய்த ஒருவரும் அந்தச் சிலைகளை வாங்கிய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இவ்விருவரையும் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பானமேலதிக விசாரணைகளை கட்டுகஸதோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனா



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பிரதியமைச்சராக பி. திகாம்பரமும் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதியமைச்சராக பிரபா கணேஷனும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்த போது....

# க.பொ.த. (சா /த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**வரலாறு**

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக*
*மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்திற்கு புள்ளடியிடுக*

1. இலங்கை வரலாற்றினை எடுத்துக் கூறும் மூல நூலாகக் கொள்ளத்தக்கது.
   1) சூளவம்சம் 2) மகாவம்சம்
   3) ராஜாவலிய 4) தீபவம்சம்

2. இந்தியாவின் ஆரியக்குழுவினரின் இராச்சியத் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   1) காமினி 2) மகாபிரஹ்ம
   3) ராஜன் 4) ஜீவக

3. பாகின்கல, பதியகம்பல, பொம்பரிப்பு ஆகிய பிரதேசங்களின் பொது இயல்பாவது
   1) ஆதிக்குடிகள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன.
   2) வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டமைக்கான சான்றுகள் உள்ளமை.
   3) புராதன குளங்கள் அமைந்த பகுதிகள்.
   4) புராதன பௌத்த சின்னங்களைக் காணலாம்.

4. 4 ஆவது பௌத்த மாநாடு நடைபெற்றது எம்மன்னனது ஆட்சியில்?
   1) பிம்பிசாரன் 2) அஜாதசத்துரு
   3) தர்ம அசோகன் 4) கனிஷ்க

5. கி.பி 5 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்தவர்களுக்கு பொருத்தம் இல்லாத விடயம்
   1) திரிபீடகம் நூல் வடிவம் பெற்றமை.
   2) ருவன்வெலிசாய அமைக்கப்பட்டமை.
   3) புனிததந்ததாது இந்நாட்டிற்குக் கொண்டு வரப்படல்
   4) குட்டம்பொக்குன நிர்மாணம்.

6. "எல்லா நாட்டு மக்களும் என் குழந்தைகளே அவர்களது சுயநலனைப் பேணுதல் என் கடமையாகும்" எனக் கூறிய இந்திய ஆட்சியாளன்,
   1) பிம்பிசாரன் 2) சந்திர குப்த மௌரியன்
   3) அசோகச்சக்கரவர்த்தி 4) சமுத்திர குப்த மௌரியன்

7. இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையை மிக நீண்ட காலம் ஆட்சிசெய்த மன்னன்
   1) பண்டுகாபயன் 2) துட்டகைமுனு
   3) 2 ஆம் பராக்கிரமபாகு 4) மாயாதுன்னை

8. கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரமான கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றியது
   1) கி.பி 1215 2) கி.பி 1453
   3) கி.பி 1688 4) கி.பி 1789

9. கப்டன் டோசன், மேஜர்ஸ்கின்னர் ஆகியோர் இலங்கையில் எத்துறை விருத்தியில் அக்கறை காட்டினர்?
   1) கல்வி 2) தபால் சேவை
   3) பெருந்தோட்டத்துறை 4) பெருந்தெரு .

10. மத்தியகால ஐரோப்பாவில் வாழ்ந்த புகழ்பெற்ற கலைஞர்களான டாண்டே, பெட்ரக், பொக்காசியோ ஆகியோர் வாழ்ந்த நாடு எது?
   1) ஜேர்மனி 2) பிரித்தானியா
   3) இத்தாலி 4) பிரான்ஸ்

11. 1931 இல் அமைக்கப்பட்ட டொனமூர் யாப்பின்படி அரசுக்கழக உறுப்பினர் தொகை.
   1) 61 2) 37
   3) 101 4) 225

12. பிரித்தானியாவின் கைத்தொழிலுக்கு வழிவகுத்த கைத்தொழிற்புரட்சி எது?
   1) நெசவுத்தொழில் 2) இரும்புருக்கு
   3) நிலக்கரி 4) மட்பாண்டக் கைத்தொழில்

13. பொலனறுவை மன்னனான 1 ஆம் விஜயபாகு மணந்த திலோக சுந்தரி எவ்வம்சத்தவர்?
   1) சாளுக்கிய 2) பாண்டிய
   3) கலிங்க 4) பல்லவ

14. கிபி. 1206 -1290 வரை வட இந்தியப் பிரதேசத்தை ஆட்சிசெய்த முதல் மொகலாய ஆட்சியாளன்,
   1) குத்புதீன் அயிபெக் 2) கியாஸ் உத்தின்பல்வன்
   3) ரசியா 4) இத்துத்மிஸ்

15. பின்வருவனவற்றுள் யாழ். இராசதானி தொடர்பான சரியான கூற்று,
   1) யாழ். இராச்சியத்தின் தலைநகர் நல்லூர்
   2) சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்த்தான்.
   3) போர்த்துக்கேயர் கைப்பற்றும் வரை யாழ். இராச்சியம் விஜயநகரபேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.
   4) யாழ். இராச்சியம் சிதைவுற உள்நாட்டுக் குழப்பங்களே காரணம்.

16. காம்போஜம் அல்லது கம்பூச்சியா எனப்பட்ட பிரதேசம் இந்துமத ஆட்சியாளனால் ஆளப்பட்டது. அது எம் மன்னன்?
   1) பிரேந்ரா 2) சுரேந்ரா
   3) ஷைலேந்ரா 4) ஜயேந்ரா

17. கோட்டை இராச்சியத்தில் விஜயபாகு கொள்ளை நிகழ்ந்த ஆண்டு எது?
   1) கி.பி 1512 2) கி.பி 1518
   3) கி.பி 1521 4) கி.பி 1543

18. மறுமலர்ச்சிக் காலத்தில் காண முடியாத விசேட இலட்சணமாவது,
   1) வெவ்வேறு கலைகள் தோற்றம் பெற்றமை
   2) மனிதரைவிட தெய்வம் உயர்வாகக் கருதப்பட்டது.
   3) கிரீக், இலத்தீன் மொழிகள் விருத்தி பெற்றமை
   4) கலைகள் பௌதீகப் பண்புகளாகப் போற்றப்பட்டது.

19. கி.பி 1875 இல் வித்தியாலங்கார பிரிவேனாவை அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த பிக்கு;
   1) ஹிக்கடுவ சுமங்களதேரர்
   2) பலனசித்தார்த்த தேரர்
   3) மீதெட்டுவத்தை குணானந்த தேரர்
   4) ரத்மலானதர்மாலோக தேரர்

20. இந்தியாவிற்கு வந்த முதல் ஆரியக்குழுவினரின் குடியேற்றம் எது?
   1) சப்த சித்து 2) குருஷேத்ர
   3) ராஜஸ்தான் 4) குஜராத்

21. 1ஆம் விஜயபாகுவின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குப் பொருந்தாத விடயங்களைக் கொண்ட தொகுதி,
   A. மகிந்ததேரரின் வருகை
   B. ரன்கொத்விகாரை நிர்மாணம்
   C. பாகியன் என்ற பிக்குவின் வருகை .
   D. கலிங்கமாகனின் படையெடுப்பு
   E. காசியப்பனுக்கும் முகலனுக்குமிடையிலான யுத்தம்

   1) AB 2) AC 3) BD 4) DE

22. நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படல் தவிர்க்க இயலாதது. அதனை மறந்து செயற்படலானது அத்திபாரமின்றி கட்டடம் கட்டுதல் போன்றது இது யாருடைய கூற்று?
   1) மகாத்மா காந்தி 2) ஜவகர்லால் நேரு
   3) அரிஸ்ரோட்டல் 4) ஈ. எச், கார்

23. கீழைத்தேசங்களுக்கு வந்த ஐரோப்பியர் முதலாம் நிரலிலும் அவர்களது மத்திய நிர்வாக மையங்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i) ஆங்கிலேயர் | A. பாண்டிச்சேரி |
| ii) போர்த்துக்கேயர் | B. பத்தேவியா |
| iii) பிரான்சியர் | C. கோவா |
| iv) ஒல்லாந்தர் | D. மெட்ராஸ் |

   1) DCBA 2) CDBA
   3) BCDA 4) DCAB

24. 14 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதி "விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையை கூறும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரம் எது?
   1) ஆலம்பூண்டி 2) ஆர்ப்பக்காமம்
   3) பல்லவராயன் பெட்டி 4) திருவாலங்காடு

25. வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை முக்கிய இடம் வகித்ததாக கொஸ்மஸ்ஸின் அறிக்கை கூறுகிறது. இதன்மூலம் தெரிவிப்பது,
1) புராதன காலத்தில் நாடுகாண் பயணிகள் இந்நாட்டிற்கு வந்துபோனமை
2) பருவக்காற்றுகளின் துணையுடன் கடற்பயணங்கள் இலகுவாயிருந்தமை.
3) புராதன காலத்தில் இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் மத்திய நிலையமாகச் செயற்பட்டமை.
4) கடற்பயணங்களுக்கு ஆதரவளிப்பதில் இலங்கை முன்னோடியாக இருந்தமை.

26. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் ஐக்கிய நாடுகள் சபை பற்றிய விடயங்களை மட்டும் கொண்ட விடை எது?
A. இனங்களுக்கிடையில் நட்புறவைப் பேணல்.
B. குறித்த வலயத்துக்குட்பட்ட மக்களின் நலனைப் பேணல்.
C. சர்வதேச ரீதியில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.
D. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் மத்தியஸ்தம் வகித்தல்.
E. அங்கத்துவ நாடுகளின் தொடர்புகளைப் பேணல்

1) AB 2) AC 3) BC 4) DE

27. இலங்கையின் புராதன கால மன்னரின் பிரதான கடமையும் பொறுப்புமாக இருந்த விடயங்கள்,
1) நாட்டினுள் எல்லா இடங்களிலும் விகாரைகள் அமைத்தல்.
2) நெற்செய்கைக்கான நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3) அரச தர்மத்தின்படி நாட்டை ஆட்சிசெய்தல்
4) உணவுற்பத்தியின் மூலம் மக்களின் தேவையை நிறைவு செய்தல்.

28. தம்பதெனியவை இலங்கையின் இராசதானியாக்கிய மன்னன்,
1) III ஆம் விஜயபாகு 2) I ஆம் புவனேகபாகு
3) II ஆம் பராக்கிரமபாகு 4) III ஆம் பராக்கிரமபாகு

29. மகதப் பேரரசை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல்மன்னன் யார்?
1) பிரம்மதத்தன் 2) வேதேகன்
3) கெசொல் மன்னன் 4) பிம்பிசாரன்

30. 1931 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் யாப்பின் பிரதான நிர்வாக நடவடிக்கையாக கொள்ளத்தக்கது.
1) அரசுக்கழகத்தின் மூலம் இலங்கையை நிர்வகித்தமை.
2) சர்வசன வாக்குரிமையை வழங்கியமை.
3) முக்கிய அமைச்சுக்கள் யாவும் பிரித்தானியர் வசமானமை.
4) பிரதேசவாரி பிரதிநிதித்துவம் தேசியத் தலைவர்களுக்கு வழங்கப்படாமை.

31. கைத்தொழிற்புரட்சிக்கு வழிவகுத்த ஓடும் விசைத்தறியைக் கண்டு பிடித்தவர்,
1) எட்மன்ட் காட்ரைட் 2) ஜேம்ஸ் ஹாங்ரிவூஸ்
3) எலியஸ் ஹோவே 4) ஜோன்கே

32. கி.பி 1594 தந்துரே யுத்தத்தில் கொல்லப்பட்ட போர்த்துக்கேயத் தளபதி
1) லோபெஸ் த சூசா 2) கொன்ஸ்டைன் த சா
3) ஜெரனிமோ த அசவேது 4) தியோகுத மெல்லோ

33. இலங்கையர்கள் எல்லோரையும் ஒரே பிரிவிற்குரிய வாக்காளர்களாகக் கொள்வது எத்தேர்தலின்போது?
A. மாகாணசபைத் தேர்தல்
B. மக்களின் விருப்புரிமையைக் கோருகையில்
C. நாடாளுமன்றத் தேர்தல்
D. ஜனாதிபதி தேர்தல்
1) AB 2) BD 3) BC 4) CD

34. இரண்டாம் யுத்தத்துடன் தொடர்புடையோரை முதலாம் நிரலிலும் அதன் ஆட்சியாளர்கள் இரண்டாம் நிரலிலும் தரப்பட்டுள்ளது. அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் விடை,

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A. பெரிய பிரித்தானியா | F. டிகோல் |
| B. பிரான்ஸ் | G. முசோலினி |
| C. ஜேர்மனி | H சர்ச்சில் |
| D. இத்தாலி | I. ஹிட்லர் |
| E. ரஷ்யா | J. ஸ்டாலின் |

1) HFIGJ 2) FGJHI 3) HFJGL 4) HJGIF

35. தோப்பாவாவியை அமைத்த மன்னன்,
1) I ஆம் அக்போ 2) இளநாகன்
3) II ஆம் முகலன் 4) I ஆம் உபதிஸ்ஸ

36. வட இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம் பேரரசின் தலைநகரமான டில்லியை தேவகிரிக்கு மாற்றிய மன்னன் யார்?
1) மொகமட் பின் துக்ளக் 2) அலாவுதீன் பல்ஜி
3) பிருஷ்ஷா 4) கியாஸ் உத்தீன் பல்பன்

37. முதலாம் இராஜசிங்கனால் வீண் பழி சுமத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கொணப்பு பண்டாரவின் தந்தை யார்?
1) விதிய பண்டார 2) வீர சுந்தர பண்டார
3) ஜயவீர பண்டார 4) றைகம் பண்டார

38. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்ற முனைந்தமைக்கான காரணமாவது,
i) திருகோணமலையைக் கைப்பற்றுவதன் மூலம் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றலாம் என எண்ணியமை.
ii) வாசனைத் திரவியங்களுக்கு புகழ்பெற்ற இடமாக விளங்கியமை.
iii) திருகோணமலைக்கு அண்மையில் கடலில் கலக்கும் மகாவலி கங்கையினூடாக நாடுபூராவும் பயணிக்க எண்ணியமை.
iv) இராணுவ நடவடிக்கைகளுக்கு திருகோணமலை பொருத்தமான இடத்தில் இருந்தமை.

39. வாயிற் காப்போனது தந்திரத்தால் அரச உரிமையை இழந்த சிங்கள மன்னன்.
1) யஸலாலகதிஸ்ஸ 2) குட்டகதனாதிஸ்ஸ
3) ஜேட்டயிதிஸ்ஸ 4) வோகரிகதிஸ்ஸ

40. வலகம்பா மன்னனது ஆட்சிக் காலத்தில் மாயரட்டைப் பிரதேசத்தில் கிளர்ச்சி செய்தவன் யார்?
1) பண்டுல 2) கிரி
3) தீய 4) ஆலார

## பகுதி I (கட்டாயமானது)

01)
அ. i) இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

(கதம்பநதி, ஜனநாதபுரம், மாதுறுஓயா, மின்னேரியா குளம், கம்பளை. களுத்துறை, கொடவாய, மகியங்கனை, பலாங்கொடை, காலி)


ii) உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக
( குவாங்கோ நதி, மும்பாய், ரங்கூன், சுவிற்சர்லாந்து, பனாமாக் கால்வாய், மத்தியதரைக் கடல், குவைத், மகலன் தொடுகடல்)

ஆ) i) ABCD எனத் தரப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடையவர்களைப் பெயரிடுக.
A. அனுராதபுரத்தில் முதன்முதலில் நெற்களஞ்சியம் வடிவில் தாதுகோபுரத்தைக் கட்டிய மன்னன்.
B. நல்லூர் கந்தசாமி கோயிலைக் கட்டுவித்தவன்.
C. கி.பி. 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தத்தை மேற்கொண்ட மலையக மன்னன்.
D. "பேராதெனிய பெலபத" என்ற பெயரால் புதிதாக அரச வம்சத்தினைத் தோற்றுவித்தவன்.


ii) கீழே தரப்பட்டுள்ள கலைப்படைப்புகள் யாவை எனப் பெயரிடுக.




A. ..................................



B. ..................................



C. ..................................



D. ..................................

iii) ABC எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறையாக எழுதுக.
A. கி.பி 1344 இல் இலங்கைக்கு விஜயம் செய்த அராபிய நாடுகாண் பயணி. ..................................

B. மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கத்தோலிக்க வணக்கஸ்தலம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
..................................

C. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில் மலைநாட்டுப் பிரதேசத்தில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பிக்கு யார்?





கரவெட்டி மக்களும் பாடசாலை அதிபர்களும் இணைந்து நடாத்திய வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராசாவுக்கான மணி விழா யாழ்.கரவெட்டி விக்னேஷ்வரா கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில் விழாநாயகன் வரவேற்கப்படுவதையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிப்பதையும் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.சேதுராசா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் காணலாம்.

(109)

# ரயில் பாதை அமைப்பது தொடர்பில் அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் ரயில்வே பாதை அமைக்கப்பட்டுவரும் நிலையில் பிரதான பாதைகளை ஊடுருவும் ரயில்பாதைகளின் அமைப்பு முறைமை தொடர்பாகவும் உள்ளக வீதிகள் குறுக்கிடும் ரயில்பாதையில் தடுப்புக்கள் மற்றும் மின்சமிக்ஞைகள் அமைப்பது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதான வீதிகளை ஊடுருவிச் செல்லும் ரயில்பாதைகளின் அமைப்பு முறைமை காரணமாக பாதசாரிகளும் வாகனங்களின் போக்குவரத்தும் பெரிதும் பாதிப்புகளுக்கு உட்படுவதாக எடுத்து விளக்கியுள்ள அமைச்சர் இம்முறைமைய்ய இலகுபடுத்துமாறும், அதேநேரம் உள்ளக வீதிகள் குறுக்கிடுகின்ற ரயில் பாதைகளில் வீதித்தடைகள் மற்றும் சமிக்ஞை விளக்குகளை அமைக்குமாறும் அதிகாரிகளுக்கு நேற்று ஆலோசனை வழங்கியதுடன் இவ்வாறான இடங்களைத் தான் நேரில் பார்த்து மேலும் ஆராய்வதாகவும் தெரிவித்ததார்.

இதன் போது கொக்குவில் உடையார் மற்றும் பிறவுண்வீதி ரயில் பாதைக் கடவைகள் தொடாபில் அப்பகுதி மக்கள் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்களையும் எடுத்துரைத்தனர்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, ரயில் பாதை அமைப்புக் குழுத் தலைவர் பொறியியலாளர் பத்மசிறி, இர்கோன் நிறுவனத்தின திட்டப் பொறுப்பாளர் கங்காதரன், பொறியியலாளர் கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விலங்கு விசர் நோய் தடுப்பு பிரிவு யாழ்.வைத்தியசாலையில் திறப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் முதல் தடவையாக விலங்கு விசர் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையம் ஒன்று நேற்று வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நாய்க்கடிக்கு இலக்காகியவர்கள் 24 ஆம் இலக்க விபத்துக் சேவைப் பிரிவுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலை இருந்து வந்தது இருந்தும் சிகிச்சை பெறுவதில் ஏற்படும் காலவிரயம் மற்றும் விபத்துச் சேவைப்பிரிவின் நோயாளர் அதிகரிப்பு போன்ற காரணிகளால் இதற்கென தனியான சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா இந்தப் பிரிவிற்கு வைத்தியர் ஒருவரும் தாதிய உத்தியோகத்தர், சிற்றூழியர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நாள் ஒன்றுக்கு நாய்க்கடிக்கு இலக்காகி சுமார் 40 பேர் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவித்தார்.

விலங்கு விசர்நோய்த் தடுப்பு சிகிச்சை நிலையத்தை யாழ்போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா வைத்தியர்கள், தாதியர்கள் கலந்து கொண்டனர். (பா)

# முதல்முறை சிங்கள பரிசாரகர் யாழ்.வைத்தியசாலையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் யுத்தத்திற்கு பின்னர் முதன் முதலாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பரிசாரகர் ஒருவர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஆண் பரிசாரகர் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு ஏற்கனவே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தும் சிற்றூழியர் தரத்திலான ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (பா)

# வீதி புனரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட வரணி-வேம்பிராய் வீதியினை திருத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரணி மத்திய கல்லூரி தொடக்கம் வேம்பிராய் சந்தி வரையான 7 கிலோமீற்றர் நீள மான வீதி குண்டும் குழியுமாக உள்ளது. இவ்வீதி யூடாக முன்னர் இ.போ.சபையின் பேருந்து பருத்தித்துறையில் இருந்து சாவகச்சேரிக்கு சேவையில் ஈடுபட்டிருந்ததாகவும வீதி சீரின்மை காரணமாக சேவை தடைப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். வரணி இயற்றாலை தாவளை, இயற்றாலை மந்துவில் வடக்கு போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் 5 கிலோமீற்றர் நடந்து சென்றே பேருந்து தரிப்பிடத்துக்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே மக்களின் நன்மை கருதி வரணி வேம்பிராய் வீதியினை புனரமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்(14)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்


# தியலம்பற்றை வீரபத்திரருக்கு வருடாந்த பொங்கல் விழா




பொலிகண்டி அருள்மிகு தியலம் பற்றை வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் விழா அதனை முன்னிட்டு நடைபெறும் வேள்வியுடன் பூர்த்தியாகியுள்ளது குறித்த ஆலயத்தில் பொங்கல் வெளிமடை 18 ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெற்று மறுநாள் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை காத்தவராயன் கழு வேறிய வேள்வி இடம்பெற்றிருக்கிறது. ஆட்டுக்கடாய் 8 ஆயிரம் ரூபா தொடக்கம் 15 ஆயிரம் ரூபா வரையிலும் சேவல் கோழி 800 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரையிலும் விற்பனை செய்யப் பட்டிருந்தன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆடு கோழிகளுக்கு மஞ்சள் நீர் தெளிக்கும் மரபு முறையில் பெறப்பட்ட நிதியும் அடியார்கள் ஆலயத்துக்கென நேர்ந்து விடப்பட்ட ஆடு மற்றும் கோழிகள் விற்பனை செய்த நிதியும் ஆலய பரிபாலன புனருஸ்தாபன வேலைகளுக்காக பயன் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# மோடிக்கு வரவேற்பளிக்க ஆர்வம் காட்டுகிறார் ஒபாமா

## வெளியுறவுத்துறை அமைச்சு தகவல்



ஏதிர்வரும் செப்ரெம்பர் மாதம அரசு முறை பயணமாக அமெரிக்காவுக்கு செல்லும் மோடியை வரவேற்க அதிபர் ஒபாமா ஆர்வமாக உள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தேர்தல் நடைபெற்றுக் கொணடிருந்த போதே மோடி பிரதமரானால் அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்போம் என்று தொடர்ந்து தாங்கள் கூறி வருவதாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளராக மேரி ஹார்ப் கூறியுள்ளார். மோடியுடனான சந்திப்பை ஒபாமா இரத்து செய்ய வேண்டும் என்று நியூயோர்க்கில உள்ள சீக்கிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது குறித்த கேள்விக்கு பதிலளித்த ஹார்ப், மக்களில் ஒருவர் அளித்துள்ள மனுவை போலத்தான் நாங்கள் அதைப் பார்க்கிறோம் என்று மேலும் கூறினார்.

2005 இல் அமெரிக்காவுக்கு வர மோடிக்கு வழங்கிய விசாவை திடீரென அந்நாட்டு அரசு திரும்ப பெற்றுக்கொண்டது. இதற்கு குஜராத்தில் 2002 இல் ஏற்பட்ட கலவரம் தான் காரணம் என்று கூறப்பட்டது. தற்போது அமெரிக்காவே வலிய வந்து மோடிக்கு வீசா வழங்கவேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலேஷிய விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி




எம்.எச்-17 மலேசிய விமானத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கடந்த ஜுலை மாதம் 17 ஆம் திகதி யுக்ரேன் எல்லைப் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் உயிரிழந்த மலேஷிய பயணிகளின் சடலங்கள் மலேஷிய தலைநகர் கோலாலமபூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன,

298 பயணிகள் பயணித்த இந்த விமானத்தில் 43 பேர் மலேஷியர்கள் என்பது குறிப்பிடதக்கது. எனினும் மலேஷிய பயணிகளின் சடலங்கள் என உறுதிப்படுத்தப்பட்ட 20 பேரின் சடலங்களே கோலாலம்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வசேத ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களின் உயிரிழப்பிற்காக தாய்லாந்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றமை இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது

# சுவிஸ் விமான நிலையத்தை கதிகலங்க வைத்த பயணி





சுவிட்சர்லாந்து விமான நிலையத்தில் பயணி ஒருவர் தவறான நுழைவு வாயிலைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்து சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சுவிஸின் ஜெனிவா விமான நிலையத்தில் பயணி ஒருவர் ஊழியர்களுக்காக வைக்கப்பட்டிருந்த நுழைவு வாயிலில் தவறாக சென்றதால் உலிச்சத்தம் கேட்டது.இதனால் விமான நிலையம் பரபரப்பானது. இதனையடுத்து பயணிகள் விமானத்தில் ஏறுவது சிறிது நேரம் தடை செய்யப்பட்டது.

மேலும் இந்த காரணத்தினால் பல விமானங்கள் தாமதமாகின. பொலிஸார் சோதனை நடத்தியதில் பயணி எதிர்பாராத விதமாக தெரியாமல் இதைச் செய்ததாக தெரிவித்துள்ளார்.

# "நாசா"வின் ரோவர் விண்கலம் சிக்கியது செவ்வாய் கிரகத்தில்



செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய, அமெரிக்கா அனுப்பிய, "கியூரியாசிட்டி ரோவர்" விண்கலம், மணலில் சிக்கியுள்ளது. பூமியில் இருந்து, 57 கோடி கிலோமீற்றர் தொலைவில் உள்ள செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய, 13 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், 1 தொன் எடையுள்ள, "மார்ஸ் ரோவர் கியூரியாசிட்டி" என்ற விண்கலத்தை, 2012 ஜனவரியில், அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பியது.

எட்டு மாத பயணத்திற்குப் பிறகு, அதே ஆண்டு, ஆகஸ்ட் 6இல், வெற்றிகரமாக, செவ்வாய கிரகத்தில் தரையிறங்கி, அந்த கிரகத்தின் பல பகுதிகளை ஆய்வு செய்து, அது தொடர்பான படங்களை நாசாவிற்கு அனுப்பி வந்தது. அந்த வின்கலம் இரண்டு ஆண்டுகால ஆய்வுக்காக சென்றுள்ள ரோவரின் பணி, இந்த ஆண்டு இறுதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், கடந்த மாதம், மவுண்ட் ஷார்ப்பின் என்ற பகுதியை நோக்கி, ரோவர் விண்கலம் சென்று கொண்டிருந்த போது, அதன் ஆறு சக்கரங்களில், ஒரு சக்கரத்தில் ஓட்டை ஏற்பட்டது. எனினும், மீதமுள்ள ஐந்து சக்கரங்களின் உதவியுடன் ரோவர் விண்கலம், தன் ஆய்வை தொடர்ந்தது. இந்நிலையில், மீண்டும் ஒரு சோதனையாக, மவுண்ட் ஷார்ப்பில் உள்ள, மறைவான பள்ளத்தாக்குப்பகுதியில் சென்று கொண்டிருந்த ரோவர் விண்கலம், அங்கிருந்த வழுக்கும் மணல் பகுதியில், வெளியே வர முடியாமல் சிக்கியுள்ளது. அதை மீட்கும் முயற்சிகளை நாசா விஞ்ஞானிகள் பூமியிலிருந்தவாறே, மேற்கொண்டு வருகின்றனனர்.

## உலகச் செய்திகள்



# காஸாவில் 496 குழந்தைகள் இஸ்ரேல் குண்டு வீச்சில் பலி

பலஸ்தீனத்தின் காஸா மீது இஸ்ரேல் கடந்த மாதம் 8 ஆம் திகதி முதல் ஹமாஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடாத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. ஆனால் காஸாவில் வாழும் அப்பாவி பொது மக்கள் பலியாகி வருவதாகவும் அவர்களின் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளதுடன் அவர்களில் குழந்தைகள் மட்டும் 496 பேர் உள்ளடங்கியுள்ளதாக யுனிசெப் நிறுவனத்தின் பலஸ்தீனத்தின் காஸா பகுதி தலைவர் பெர்னில் அயர்ன்சைடு தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு கருதி ஐஸ்லாந்து ஏரிமலை அருகே உள்ள மக்கள் வெளியேற்றம்

ஐஸ்லாந்து நாட்டின் இரண்டாவது பெரிய எரிமலையான பர்டர்புங்கா எரிமலை அமைந்துள்ள தென்மேற்கு பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமையில் இருந்து புவியியலாளர்கள் 300 இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்களைக் கணக்கிட்டுள்ளனர்.

இந்த நிலை அதிர்வு நடவடிக்கை ஒரு எரிமலை வெடிப்பிற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் கரு ன்றனர். கடந்த 2010ஆம் ஆண்டில் அங்குள்ள எய்.ஜப்.ஜள்ளஜோகுல் எரிமலை வெடித்த போது அதிலிருந்து சிதறப்பட்ட சாம்பல் துகள்களால் தொடர்ந்து ஆறு நாட்களுக்கு பெரும்பாலான ஐரோப்பிய வான்வெளிப் போக்குவரத்து மூடப்பட்டது. இப்போதும் எச்சரிக்கைக் குறியீட்டின் நான்காவது தர நிலையான செம்மஞ்சல் எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளதால் இதுபோன்றதொரு பாதிப்பு நிகழக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

## 2034ஆம் ஆண்டில்

யான ஒரு நிலைக்கு தள்ளிவிடமுனைய மாட்டார்கள். இதன் காரணமாக பிரதான

யுத்த வலயம் வேண்டுமென்றே அதிக மக்கள் பரம்பல் உள்ள இடங்களையும் மற்றும் தொழிற்சாலைப் பிரதேசங்களையும் தவிர்த்து அதற்கு அப்பால் புற வலயங்களில் போர் வலயங்களை வரையறுக்கும் நிலை ஏற்படலாம்.

அதற்கு மேலும் ஆசியாக் கண்டத்தில் தரை வழியாக ஒரு பெரிய எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவது அநேகமாக எப்போதும் ஒரு தோல்வி முயற்சி, என்கிற கடந்தகால படிப்பினையை நினைவில் கொண்டு இராணுவ உத்திகள் மாற்றியமைக்கப்படும். இந்த அனுமானங்கள் யாவும் கடல், வான் மற்றும் தரிசான மலைப் பகுதிகள் மற்றும் வெளி இடங்கள் அதேபோல இணையங்கள் என்பனவற்றை மூன்றாம் உலகப் போரின் முக்கிய யுத்த களங்களாக அமைக்கும்.

மூன்றாம் உலகப் போரின் மற்றொரு விசித்திரமான அம்சமாக, எதிரிகள் இடையே பயனுள்ள சேவைகளை பரிமாறுவதற்காக இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச அங்கங்கள் தொடர்ந்து இயங்கி வருவார்கள். பல தசாப்தங்களாக சர்வதேச நிறுவனங்களைக் கட்டியெழுப்பியது முற்றிலும் பயனற்றுப் போய்விடவில்லை என்பதை இது நிரூபிக்கும்.

யுத்தத்தை தடுப்பதில் சர்வதேச நிறு வனங்கள் தோல்வியடைந்ததால் குறைந்த பட்சம் போரின் அளவை மட்டுப்படுத்தவும் மற்றும் அதன் விளைவை நிதானப் படுத்தவும் அவை முற்படும்.

இந்தக் காரணத்தால் கடந்த நூற்றாண்டுகளில் இடம்பெற்ற மொத்த யுத்தங்களைக் காட்டிலும் மூன்றாம் உலகப் போர், ஸ்பானிய தொடர்ச்சி அல்லது 18ஆம் நூற்றாண்டின் ஏழு வருட யுத்தங்கள் என்பனவனற்றை அதிகம் ஒத்ததாகவும் இருக்க முடியும்.

காரணம் என்னவென்றால் யுத்தம் ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்டளவு இழப்புகளையும் மற்றும் வளங்களை இடமாற்றுவதற்கு முற்றிலும் அவசியமற்றதாகவும் இருப்பதால் அதை கால வரையின்றி நீட்டிப்பதற்கு எதிர்பாராத விளைவுகள் தோன்றக்கூடும், கடந்தகால யுத்தங்களின் தாக்கங்களோடு ஒப்பிடுகையில் அவை ஒரு சில வருடங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. ஏனென்றால் யுத்தத்திற்கான வளங்கள் விரைவாக தேய்வடைந்து போயின ஒரு போர், சமூகத்துக்குதாங்க முடியாத அளவுக்கு இன்னல்களை ஏற்படுத்தாவிட்டால் அவர்கள் அதனுடன் வாழ்வதற்கு கற்றுக் கொள்வார்கள்.

இதன்படி மூன்றாம் உலகப் போர் மற்றொரு முப்பது அல்லது ஐம்பது வருடத்துக்கு நடைபெறும்?

சில கட்டங்களில் மனிதாபிமான செறிவு குறைந்த யுத்தத்தில் நியமிக்கப்பட்ட தாக்குதலற்ற வலயங்கள் மற்றும் நடத்தைக் குறியீடுகள் என்பன, கட்டுப்படுத்தும் விதிகள் இல்லாதபடியால் மிகவும் பாரம்பரியமான இரத்த வெள்ளத்தையும் மற்றும் பாரிய இழப்புகளையும் ஏற்படுத்திவிட முடியும்.

அணு ஆயுத போர் விரிவாக்கத்தையும் தவிர்க்க முடியாது, அதன் விளைவு எதுவாயினும், எங்களுக்குத் தெரிந்தவரை இந்தப் போர் நிச்சயமாக உலகத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரும்.

# இணக்க அரசியல் தலைமைத்துவமே சமுர்த்தி திட்டத்தை அமுலாக்கியது

## யாழ். செயலகத்தில் ரகுநாதன் உரை

(யாழ்ப்பாணம்)

அரசுடன் இணைந்த அரசியல் தலைமைத்துவமே அன்று சமுர்த்தி திட்டத்தை இங்கு கொண்டு வந்தது. அந்தவகையில் நாம் அத்தலைமைத்துவத்தை மறந்து செயற்படக்கூடாது என வாழ்வின் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர் ரகுநாதன் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டம் பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒரு தொகுதியினருக்கு அறிவுறுத்தும் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

இன்று இத்திட்டத்தின் கீழ் சுமார் 85,000 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர்.

ஆரம்பத்தில் இத்திட்டம் இம்மாவட்டத்தில் செயற்படுத்தப்படாத நிலையில் இத்திட்டத்தை பல்வேறு முயற்சிகளின் ஊடாக இங்கு அமுல்படுத்தியவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

எமது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மக்களை செயற்பாட்டு ரீதியில் அணிதிரட்ட வேண்டும்.

அரசின் அரசியல் தலைமைத்துவத்துடன் இணைந்தே இத்திட்டத்தை முன்னெடுக்குமாறு சுற்றுநிருபத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இத்திட்டம் யாரால் இங்கு கொண்டு வரப்பட்டது, யாரால் செயற்படுத்தப்படுகிறது என்பதை நாங்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

கொழும்பு, கம்பஹா போன்ற மாவட்டங்களில் கூட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பாரிய பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. ஆனால், இங்கு நிலைமை அப்படியல்ல என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உரையாற்றும் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலர் ஒருசில பிரதேச செயலகங்களில் பாதிப்புகளுக்கு உட்படுவதாகவும் இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிரதேச செயலர்கள், பிரதேச சபை தலைவர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அமைச்சரது யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் உட்பட மாவட்டத்தின் ஒருபகுதி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# செல்வச்சந்நிதி மகோற்சவம் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## விதிமுறைகளும் அறிவிப்பு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளநிலையில் அதன் ஒழுங்குகள் தொடர்பான 2 ஆவது கூட்டம் நேற்று முன்தினம் தொண்டைமானாறு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இவ்வருட மகோற்சவ பொறுப்பாளர் வி.தெய்வேந்திரர் ஐயர், கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் துரைராஜா, வல்வெட்டித்துறை நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் நவரட்ணலிங்கம், இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி வடமராட்சி சிற்றூர்தி சேவைச்சங்க தலைவர் க.அன்ரன், யாழ். மாவட்ட சிற்றூர்தி சங்கங்களின் இணைத் தலைவர் எஸ்.கெங்காதரன், வல்வெட்டித்துறை பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.சிவபாலன் ஆகியோர் உட்பட நீர்ப்பாசனத் திணைக்களம், விலைக் கட்டுப்பாட்டுச்சபை, இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், சாரணிய சங்கம், மதுவரித்திணைக்களம், மின்சார சபை ஆகிய திணைக்களங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆலய புனிதத்தன்மை மற்றும் அடியார்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சுகாதாரம், குடிநீர், பாதுகாப்பு, மின்சாரம், உணவு மற்றும் வியாபார நிலையங்கள், தொண்டர் சேவை உள்ளிட்ட பொது விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக தேவையை கருத்தில் கொண்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும், தடை நிலையங்களை மீறி உள்நுழையும் வாகனங்கள் அனுமதிப்பத்திரமிருந்தால் மட்டுமே அனுமதியளிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், செ‌ன். ஜோன்ஸ் அன்புலன்ஸ், சாரணியம், முதலுதவிச்சங்கம் போன்றவற்றில் மாணவர்கள் சேவையில் ஈடுபடவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (116)

### சங்குப்...

இருவர் யாழ்ப்பாணம் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி எரிகாயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### அரச...

இதன்போது இடையில் குறுக்கிட்டு அமைச்சர்கள், முதலமைச்சர் மற்றும் அவைத் தலைவர் போன்றோருக்கு வழங்கப்படும் வாகனங்கள் குறித்து எதுவுமே அறியாதது போல் அவை உத்தியோகபூர்வ பாவனைக்கா, தனிப்பட்ட பாவனைக்கா என்பதை அவையில் தெரிவிக்கவேண்டும் என அவை செயற்பாட்டு நடைமுறைக்கு முரணாக குறுக்குக் கேள்வி எழுப்பினார்.

இது அவைத் தலைவர், முதலமைச்சர் அல்லது அமைச்சர்களை கிண்டல் செய்யும் வகையிலா கேள்வி எழுப்பினார் அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இது குறித்து எதுவும் தெரியாதா என்பது புரியாதுள்ளது. (இ)

### வடக்கில்...

நேற்றைய தினம் மாலை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வீதிகளில் வெள்ளம் தேங்கும் அளவிற்கு கனமழை பெய்துள்ளதுடன், தொடர்ச்சியாக கனமழை பெய்வதற்கான காலநிலை நீடித்து வருகின்றது.

இதனால் மக்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். மேலும் கடந்த 2013 ஆம் ஆண்டில் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்ட நிலையில், இவ்வாண்டு பருவமழையினை ஆவலோடு எதிர்பார்த்திருந்த விவசாய மக்களும் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளதுடன்,

தற்போதுள்ள காலநிலை தொடர்ந்து நீடிக்கும் எனவும், இடியுடன் கூடிய மழை தொடர்ச்சியாக பெய்யும் வாய்ப்புள்ளதாகவும் வானிலை மத்திய நிலையம் நேற்று மாலை தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, நீர்கொழும்பில் 137 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் கட்டுநாயக்காவில் 136 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டது.

நாட்டின், வறட்சி நிலவிய பிரதேசங்களான அநுராதபுரம், திருகோணமலை, புத்தளம், பொலன்நறுவை, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களிலும் முறையே 0.3, 6.4, 0.6, 7, 16.4 மில்லிமீற்றரளவில் மழை பெய்ததாக திணைக்களம் குறிப்பிட்டது.

அத்துடன், காலி மாவட்டத்தில் 81 மில்லிமீற்றரும் கொழும்பு மாவட்டத்தில் 16 மில்லிமீற்றரும் மழை பெய்ததாக வளிமண்டலவியல் திணைக்கம் குறிப்பிட்டது.

நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தின் பல பகுதிகளிலும் இந்த மழை நீடிக்கும் எனவும் சில பகுதிகளில் இடியுடன்கூடிய மழை பெய்யுமெனவும் திணைக்களம் கூறியது.

### படை...

நிலைமை அங்கு இல்லை என்பதை எடுத்துரைத்ததாகவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

இந்தியாவில், இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படும் விவகாரம் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், இது இரு நாட்டு அரசாங்கங்களின் விவகாரம் என்றும் இது தொடர்பில் தங்களுக்கு எந்த விதமான கருத்தும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மின்சாரம்...

இடம்பெற்றுள்ளது. இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கசிநாத் (வயது - 26) என்பவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

ஆபத்தான நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தடியைச் சேர்ந்த கந்தசாமி சசிகுமார் (வயது - 26), இராசஜெயம் விஜயமோகன் (வயது - 27) ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (25)

### "வாழ்வின் எழுச்சி"...

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தும் கூட்டமொன்று நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்த இக்கூட்டத்தில், தலைமையுரையாற்றிய மாவட்ட செயலர், சமுர்த்தி உத்தியோகத்தர்களாக செயற்பட்டு வந்த காலத்திலும் இவர்கள் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக மாற்றப்பட்ட இதுவரை கால கட்டத்துக்குள்ளும் இந்த அலுவலர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் தொடர்பில் எடுத்து விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து வாழ்வின் எழுச்சித் திட்ட அமைப்பாளர் ரகுநாதன் கருத்துத் தெரிவிக்கும் போது,

இதுவரையில் 5 கட்டங்களைப் பூர்த்தி செய்துள்ள வாழ்வின் எழுச்சித் திட்டம் தனது 6 ஆவது கட்டத்தை எட்டியுள்ளதாகவும் நிகழ்ச்சித் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய திட்டங்களில் இருந்து இது வேறுபடுகிறது எனத் தெரிவித்தார்.

ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், இதனூடாக வழங்கப்படவுள்ள தனிநபர் சுழற்சி கடன் திட்டத்தின் கீழ் உச்சக்கடனாக 75,000 ரூபாவினை மானியத் தொகையாக ஒரு நபர் 50,000 ரூபாவைப் பெற இயலுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் நீண்டகால எல்லை அடிப்படையில் 50,000 ரூபா கடனுதவி பெற இயலுமென விளக்கிய அவர், நபர்கள் இணைந்த கூட்டு தொழில் முயற்சிகளுக்கான 5 இலட்சம் ரூபா வரையில் கடனுதவி பெற இயலுமெனத் தெரிவித்தார்.

இதனிடையே சபையினரிடையே கருத்துக்கள் கேட்கப்பட்ட நிலையில்,

போதுமானளவு உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும். பயனாளிகளையும், முத்திரைகளையும் அதிகரிக்க வேண்டும். மீளாய்வுகள் மேற்கொள்ளும் போது சகல தொகுதிகளிலும் ஒரே விதமாக அதனை மேற்கொள்ள வேண்டும். உள்ளக இடமாற்றங்கள் செய்ய வேண்டும். அலுவலகக் கட்டடங்கள் புனரமைப்பு மற்றும் நகர்ப்குதிகளில் நிலையான கட்டடங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சாவகச்சேரி வங்கிக்கான காணியை நகர சபையிடம் இருந்து பெற்றுத்தர வேண்டும். போன்ற கருத்துக்கள் அமைச்சரிடம் கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகளை அவதானத்தில் எடுத்துக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் 27 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையைத் திறந்து வைக்கும் முகமாக யாழ். வரும்போது இக்கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களது சங்கம் சார்பில் அதன் தலைவர் கருத்துத் தெரிவிக்கும் போது,

சமுர்த்தித் திட்டம் இங்கு நடைமுறைப்படுத்த இயலாததொரு காலத்தில் அமைச்சர் மேற்கொண்ட அயராத முயற்சிகளின் பயனாக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க காலத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

அன்றுமுதல் இன்றுவரை சமுர்த்தி உத்தியோகத்தர்களது அனைத்து கோரிக்கைகளையும் ஏற்று அமைச்சர் தீர்த்து வருகின்றார்.

அத்தோடு பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் உயரிய பயனை அடைய வேண்டும் என்பதிலும் அமைச்சர் உறுதியுடன் செயற்பட்டு வருபவர்.

அதேபோன்று வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாகவும் பயனாளிகள் உச்சபயனை அடைய வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் தாங்கள் பணியாற்றக் கடமைப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினும் உரையாற்றினர்.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வாழ்வின் எழுச்சித் திட்ட உதவி ஆணையாளர் மகேஸ்வரன், பிரதேச செயலர்கள், பிரதேச சபை தலைவர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அமைச்சரது யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் உட்பட மாவட்டத்தின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கண் சிகிச்சைப் பிரிவுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் கண்ணியல் பிரிவுக்கு அவுஸ்ரேலிய மருத்துவ நிதியமும் அவுஸ்ரேலிய ரோட்டரி கழகமும் இணைந்து சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன கருவிகளை அண்மையில் அன்பளிப்புச் செய்திருக்கிறது என்று யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

Yag Lasar எனும் நவீன கருவியானது லேசர் சிகிச்சைக்கு பயன்படும் உபகரணமாகும். இவ் உபகரணம் கொழும்பு கண் வைத்தியசாலையில் மட்டும் இருந்தமையால் நோயாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் கொழும்பு சென்றே சிகிச்சை பெற வேண்டி இருந்தது. அவுஸ்ரேலிய ரோட்டரி கழகத்தினூடாக வழங்கப்பட்ட இக்கருவிகள் மூலம் யாழ்ப்பாணத்திலேயே சகல கண் சிகிச்சைகளும் வழங்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்த அவர்,

ஏற்கனவே இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வழங்கப்பட்ட கண் சத்திர சிகிச்சைப் பிரிவு இயங்கமுடியும் என வைத்தியசாலை நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அடுத்த கட்டமாக குழந்தைகள் கண்நோய் தொடர்பாக கண்டறியும் ஸ்கானர் இயந்திரமும் இதன்மூலம் குழந்தைகளின் கண்நோய் மற்றும் குளுக்கோமா போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.

எனவே கண் வைத்திய நிபுணர் எம்.மலரவனின் முயற்சியில், அவரின் கோரிக்கையின் பேரில் மேற்படி நன்கொடை வழங்கியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் தெரிவித்த யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா இந்த உபகரணத் தொகுதியையும் ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்று காண்பித்தார்.

கண் வைத்திய நிபுணர் மலரவன் ஊடகவியலாளர்களுக்கு உபகரணங்களின் பயன்பாடும் அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துக் கூறினார். (பா)

# வடக்கில் வறட்சி காரணம் என்ன?

## வியக்கவைக்கும் புதிய வியாக்கியானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள படையினராலும், வீதி அபிவிருத்தியாலுமே வழமைக்கு மாறாக இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டுள்ளது எனக் கண்டுபிடித்துள்ளாராம் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமாகாண சபையின் அமர்வில் அமைச்சர் ஐங்கரநேசரன் இவ்வாறு க்ாரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

வீதி புனரமைப்பு என்ற பெயரில் ஆயிரக்கணக்கான பவுசர் நீரை வீதி ஒப்பந்தகாரர்கள் பயன்படுத்துவதாலும், அது வும் குளங்களில் இருந்தே அந்நீர் உறிஞ்சப்படுவதாலும் இதற்கான கட்டணங்கள் எதுவும் உள்ளூராட்சி சபையினருக்கு வழங்காது ஒப்பந்தகாரர்கள் வருமானம் உழைப்பதாகவும் தெரிவித்ததுடன், இவ்வாறு உறிஞ்சப்படும் நீர் வீதிகளில் ஊற்றப்படுவதை தாம் கண் ணுற்றதாகவும் தெரிவித்தார்.

இதேபோல யாழ்.குடாநாட்டு சனத்தொகைக்கு மேலதிக பழுவாக உள்ள படையினரின் தேவைக்கு நீர் பயன்படுத்தப் படுவதாலுமே இம்முறை வழமைக்கு . மாறாக அதிக வறட்சி எதிர் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததார்.

குடிநீர் தேவைக்கு அல்லாது எல்லாத் தேவைக்கும் படையினர் நீரை உறிஞ்சுவதாலேயே குடிநீருக்குப் பெரும் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக அவர் காரணங்களைச் சுட்டிக்காட்டினார். (இ)

# அம்மன் வீதிப் புனரமைப்பு வலுவடையும் கோரிக்கை

ஏறக்குறைய 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்புச் செய்யப்படாத அராலி கிழக்கு அம்மன் வீதி மீள்புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அராலி மக்கள் வலி. மேற்கு பிரதேச செயலரையும், வலி.மேற்கு பிரதேச சபையையும் கூட்டடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

40 வருடங்களாக அழிவடைந்துள்ளதும், புனரமைக்கப்படாத அராலி கிழக்கு அம்மன் வீதி தொடர்பாக அப்பிரதேச மக்கள் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள்தாவது,

வலி.மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான அம்மன் வீதி பல நூற்றாண்டு காலமாக பாவிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்பின்றி அழிவடைந்துள்ளது.

எனவே அனைத்து மக்களின் கோரிக்கைக்கு இணங்க அரா[illegible] கிழக்கு அம்மன் வீதியைப் புனரமைத்து அபிவிருத்திக்கு வித்திடுமாறு அப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (92)

# ‘எபோலா’ வைரஸ் அபாயம்; இலங்கைக்கும் எச்சரிக்கை

‘எபோலா’ வைரஸ் இலங்கைக்கும் பரவும் அச்சுறுத்தல் இருப்பதாக தெரியவருகிறது.

கிழக்கு நாடுகளில் மிக வேகமாகப் பரவி வரும் இந்த எபோலா வைரஸ், இலங்கைக்குள் வரும் சந்தர்ப்பங்கள் அதிகம் இருப்பதாகவும் அதனைத் தடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் விசேட மருத்துவர் திபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கை இராணுவத்தினர், அங்கு சுற்றுலா சென்ற இலங்கையர்கள், அங்கு தொழில் புரிந்து வருபவர்கள் நாட்டுக்கு திரும்பி வரும் போது, அந்த வைரஸ் இலங்கைக்குள் பரவக் கூடும்.

இந்த வைரஸ் நோய் பரவுவதைத் தடுக்க அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் அன்டிபயோடிக் மருந்தைக் கண்டுப்பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மிக விரைவில் இந்த நோய்த்தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விடும் எனவும் திபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே சூலில் மூன்று சிசுக்கள்



முதல் இரண்டு பிரசவங்களின் போதும் இரட்டை சிசுக்களை பெற்ற பெண்ணொருவர் தனது மூன்றாவது பிரசவத்தில் மூன்று சிசுக்களை பிரசவித்த விநோத சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது. கொழும்பு, மரதானையை சேர்ந்த பாத்திமா நிரோஷா என்ற 31 வயதுடைய பெண்ணே இவ்வாறு தனது மூன்றாவது பிரசவத்தின்போது 3 ஆண் சிசுக்களை பெற்றுள்ளார்.

இப்பெண் ஏற்கனவே முதலாவது பிரசவத்தில் இரட்டை சிசுக்களை பிரசவித்துள்ளதுடன் இரண்டாவது பிரசவத்திலும் இரட்டை சிசுக்களை பெற்றார்.

இந்நிலையிலே மூன்றாவது பிரசவத்திலும் அவர் மூன்று சிசுக்களை பிரசவித்துள்ளார். சொய்சா பிரசவ வைத்தியசாலையிலே இவருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவரது முதல் இரண்டு பிள்ளைகளுக்கும் தற்போது 15 வயதாகிறது.

சாஹிர் அப்துல் கரீம், பாத்திமா நிரோஷா தம்பதிக்கு தற்போது மொத்தமாக 7 ஆண் பிள்ளைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாத்திமா நிரோஷா உலகிலேயே மூன்று பிரசவங்களின் போதும் அதிகமான எண்ணிக்கையில் சிசுக்களை பெற்றவர் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கக்கூடும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

தற்போது, தாயும் சிசுக்களும் நலமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சிறுவன் பலி

(கொழும்பு)

தங்கல்லை, கபுஹேன்வல கடற்பிரதேசத்தில் குளிப்பதற்காக தந்தையுடன் சென்ற சிறுவனொருவன் கடலில் மூழ்கி பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

6 வயதுடைய சிறுவனே இவ்வாறு கடலில் மூழ்கிப் பலியாகியுள்ளான்.

மேலும் சிறுவனுடன் கடலில் மூழ்கிய அவனது சகோதரர் (வயது-12) மீட்கப்பட்டுள்ளதாகவும் தங்கல்லை பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மிதக்கும் சந்தை திறப்புவிழா ஒத்திவைப்பு

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு, நேற்று மாலை 6.30 மணிக்கு, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால், பொதுமக்களின் பாவனைக்காக, கையளிக்கப்படவிருந்த கொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் வர்த்தக சந்தையை கையளிக்கும் நிகழ்வு, தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மிதக்கும் வர்த்தக சந்தையை கையளிக்கும் நிகழ்வு தொடர்பிலான ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்து பொலிஸார் விபத்தில் சிக்கி படுகாயம்

வவுனியா ஈரப்பெரியகுளம் பிரதேசத்தில் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் சிக்கியதில் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 12.45 மணியளவில் கடமை முடிந்து ஈரப்பெரியகுளம் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டிற்கு சென்ற சமயம் முன்னால் சென்ற டிமோ வட்டா ரக வாகனம் ஒன்றில் மோதுண்டே விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் ஈரப்பெரியகுளம் பிரதேசத்தில் வசிக்கும் சோமசிங்க வயது 31 என்பவரே காயமடைந்ததாக தெரியவந்துள்ளது.

கால்களில் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோத்தர் கண்டி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்கான கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (70)

# பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு

வேலையற்ற பட்டதாரி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட 1994 ஆம் ஆண்டுக்கு பின் நியமனம் பெற்ற பட்டதாரிகள் வகுப்பு II இற்குள் உள் வாங்கப்படவுள்ளனர்.

மாகாண பொது நிர்வாக அமைச்சினால் ஆட்சேர்க்கப் பட்டு 10 வருடங்கள் பூர்த்தி செய்துள்ள பட்டதாரிகளே வகுப்பு II இறகுள் உள்வாங்கப்படவுள்ளதாக மாகாண பிரதி பிரதம செயலாளர் எஸ்.துரைராஜா அறிவித்துள்ளார்.

உரிய தராதரங்களை உடைய பட்டதாரிகள்ள உடன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவியுயர்வு சம்பளப்படிநிலை MN-4-2006 A வேதன திட் டத்திலேயே உள்வாங்க அனைத்து நடவடிக்கைகளையும் பிரதி பிரதம செயலாளர் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (92)

# வாள் வெட்டில் காது இழந்தார்

(கரணவாய்)

இருவருக்கிடையிலான தகராறு முற்றியதால் அது வாள் வெட்டில் முடிந்தது.

இச்சம்பவம் துன்னாலை வடக்கு, சக்குச்சம்பா என்ற இடத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஒருவரின் காதுப்பகுதி சீவி எடுக்கப்பட்டுள்ளது. (18)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.